காரியப்பர் மனு பிரிவுகவுன்சிலில் தள்ளுபடி

Registered as a Newspaper in Ceylon ★ விலை தம் 10

ஈழநாடு

EELA NADU

மலர் 9

இதழ் 166

National Tamil Daily

தேசிய தினசரி

சந்தாப்பணம் பிலவங்க ஆடி 11 ரபி ஆகி. 18 வியாழக்கிழமை [27-7-67]

7 வருடங்களுக்கு தேர்தலில்நிற்கமுடியாது

லண்டன், ஜூலை 26

முன்னாள் கல்முனை எம். பி. கேட் முதலியார் எம். எஸ். காரியப்பரின் அப்பீல் மனு பிரிவிகவுன்சிலில் தள்ளுபடி செய்யப்பட்டது.

கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் மீதும் மற்றும முன்னைய அமைச்சர் சிலர், உதவி அமைச்சர் சிலர் மீதும் சுமத்தப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள்பற்றி விசாரணை செய்த லஞ்ச விசாரணைக் கமிஷன், குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தது. இதைத்தொடர்ந்து 1965-ம் ஆண்டில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர்கள் ஏழுவருடங்களுக்கு குடியுரிமை இருக்கக்கூடாது என்னும் சட்டம் ஒன்றைப் பார்லிமெண்ட் நிறைவேற்றியது. இச்சட்டம் செல்லுபடியாகாது என தீர்ப்பளிக்க

[5-ம்பக்கம்பார்க்க]

பம்பாய்வெங்காயம், ஜாவளி மிளகாய் இறக்குமதி வெட்டு

ஒதுக்கப்பட்டசெலாவணி குறைக்கப்பட்டது

கொழும்பு, புதன்

துணி வகைகள், பம்பாய் வெங்காயம், செத்தல் மிளகாய், மோல்டட் மாவு ஆகியவைகளின் இறக்குமதி மேலும் குறைக்கப்படவிருக்கிறது

இப்பொருட்களின் இறக்குமதிக்கென அனுமதிக்கப்பட்டிருந்த அந்நிய செலாவணி பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கிறது

உப உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கென ஒதுக்கப்பட்டிருந்த 31 கோடியே 86 லட்சம் ரூபாய் இப்பொழுது 24 கோடியே பத்து லட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

துணி வகைகளின் இறக்குமதிக்கு 6 கோடி ரூபாய் செலாவணி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1966ம் ஆண்டில் இத்தத் துணிகளுக்கென 'ஆர்டர்' கொடுத்திருந்தும் அவை இன்னும் வந்து சேராததால் துணிகளின் இறக்குமதிக்கென புதிதாக ஒதுக்கப்பட்ட செலாவணி குறைக்கப்படலாமென அரசாங்கம் கருதுகிறது.

மிளகாய், வெங்காய உற்பத்தியை இங்கு அதிகரிக்கலாமென்றும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

மானவ ஆசிரியர் நியமனம் ஒரு சாபக்கேடு

கல்வித்துறை நிர்வாகத்திலும அதிருப்தி: ஆசிரியர் சங்க முன்னாள்தலைவர் கருத்து

புன்னாலைக்கட்டுவன், புதன்

"சர்வதேச அடிப்படையில் இந்நாட்டு ஆசிரியருக்குச் சம்பளம் வழங்கப்பட்டால் மட்டுமே கல்வியின் தரத்தை உயர்த்த முடியும். வாழ்நாள் முழுவதும் வாழ்க்கைச் செலவுடன் போராடிக் கொண்டே கடமையாற்றுவதற்கு ஆசிரியர் துறவிகளல்லர்" என்று தேசிய ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் திரு. என். சபாரத்தினம் உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் ஆசிரியரின் பன்னிரு கோரிக்கைகள் பற்றிப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

திரு. எஸ். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சபாரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்கவும், குறைந்த ஊதியத்துடன் வேலை வாங்கவும் எம். பி. க்களின் ஆதரவைப் பெறவும், அரசாங்கம் தகுதியும், பயிற்சியுமற்ற மாணவ ஆசிரியரை நியமித்து, கல்வியைக் கலப்படமாக்குவது எமது பெரும் சாபக் கோடகும். உலகிலுள்ள எந்தத் தொழிலுக்கும் பயிற்சி வேண்டுமென்ற உண்மையை ஆசிரியர்விடயத்தில் அரசாங்கம் உதாசீனம் செய்கிறது.

இந் நிலைமையை ஒரளவுக்காவது சீர்திருத்தியமைக்க, கல்வியுடன் தொடர்பற்ற அதிகாரிகளிடம் கல்வித்துறை நிர்வாகத்தை ஒப்படைக்காது, பாரபட்சமற்ற கல்விச் சபை ஒன்றிடம் நாட்டின் கல்வித்துறை நிர்வாகம் ஒப்படைக்கப்படல் வேண்டும். ஆசிரியர் பதவியுயர்ச்சி, இடமாற்றம் ஆகிய விடயங்களில் தனிப்பட்ட அதிகாரிகள் தலையிடுவது கல்வித் தரத்துக்கு அடிக்கும் சாப்பறையாகும்.

சங்கச் செயலாளர் திரு. வீ. சுந்தரலிங்கம் நன்றி கூறினார்.

புதிய பஸ்நிலையம

சுன்னாகம், செவ்.

சுன்னாகம் பட்டினசபையாரால் பதினேயாயிரம் ரூபா செலவில் நவீன மின்சார வசதியுடன் அமைக்கப்பட்ட புதிய பஸ்நிலையம் தேசிய சேவை அமைச்சைச் சேர்ந்த உயர்தரஅதிகாரி திரு. க. சி. நித்தியானந்தத்தினால் ஆகஸ்ட் இரண்டாம் திகதி திறந்து வைக்கப்படும். மேற்படி திறப்புவிழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை, நிர்வாக எஞ்சினியர் திரு. நடேசன் உட்பட மற்றும் பலர் பங்கு பற்றுவார்கள்.

வவனியாவில் கலை வளர்ச்சி

வவனியா, புதன்

பரதநாட்டியம், நாடகம், கிராமியநடனம் முதலியவற்றில் வவனியா முன்னேற்றமடைந்திருப்பது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வவனியா வட்டார தமிழ்ப் பாட சாலைகளின் கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் கூறினர்.

பிரிட்டிஷ் மந்திரி ராஜினமா

லண்டன், ஜூலை 26

பிரிட்டிஷ் சமூக பாதுகாப்பு மந்திரி செல்வி மார்கரெட் பேர்கூஸன், தமது மந்திரிப்பதவியை ராஜினமாச் செய்துவிட்டார்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனின் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள அதிருப்தியாலேயே அவர் ராஜினமா செய்துள்ளார்.

இடமாற்றம நிச்சயம

புன்னாலைக்கட்டுவன், புதன்

அகில இலங்கை ரீதியில் புரட்டாதி முதல் திகதியிலிருந்து பல ஆசிரியர் வெளிமாகாணங்களுக்கு மாற்றப்படவிருக்கின்றனர். யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து பிறமாகாணங்களுக்கான மாற்ற உத்தரவுகள் யாழ். கல்விக்கந்தோருக்கு அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

[ந. நி. திருமலையில்

மந்திகைப் பெண்மணிக்கு ரூ. 40 ஆயிரம் அதிஷ்டம்

உடுப்பிட்டி, புதன்

கடனுக்கு வாங்கியதேசிய சுவீப் டிக்கட் இரண்டாவது பரிசைப் பெற்றுள்ளது. துன்னாலை வடக்கைச் சேர்ந்த இரத்தினம் என்பவரின் மனைவியான மாணிக்கம் என்னும் பெண்மணி மந்திகையிலுள்ளகடையொன்றில் கடனுக்குச் சுவீப் டிகெட் வாங்கி மறுநாளே பணத்தைக் கொடுத்தார். அவர் கடனுக்கு வாங்கிய 151-வது தேசிய சுவீப் டிக்கட் சீட்டிழுப்பில் 2-வது பரிசான ரூபா 40,00 கிடைத்துள்ளது.

கூலித் தொழில் புரிந்து சீவனம் செய்துவரும் இவர்கள் வறுமையில் வாடினர். இவருக்கு ஐந்து பெண் பிள்ளைகளும் மூன்று ஆண் பிள்ளைகளும் உள்ளனர். இவருடைய டிக்கெட்டிற்கு இரண்டாவது பரிசு கிடைத்துள்ளதைத் தெரிவித்த பொழுது ஆனந்தக் கண்ணீர் சொரிந்து தனது குலதெய்வத்தை வழிபட்டார்.

இப்பெண்ணுக்கு இந்த டிக்கட்டை விற்ற கடையின் உரிமையாளர் முன்னர் முதல் பரிசு பெற்ற அதிர்ஷ்டசாலி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும மகஜர் சிங்கள ஆசிரியர் வேண்டும்

திருக்கோணமலை, புதன்

"நமது பிள்ளைகளின் கல்வித்தரம் உயரவும், எமது சகோதர மொழியான சிங்களத்தை நமது பிள்ளைகள் பயிலவும் சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை உடனடியாக அனுப்பி வைக்குமாறு எமது சங்கம் தீர்மானம் நிறைவேற்றிக் கல்விப் பகுதிக்கு மகஜர் அனுப்பி மூன்று மாதங்களாகியும் இன்று வரை சிங்கள ஆசிரியர் அனுப்பப்படாதது மர்மமாகவே இருக்கின்றது. திரும்பவும் சிங்கள ஆசிரியர் வேண்டுமென்ற மகஜரை சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்" என்று திருக்கோணமலை உப்புவெளி மெதடிஸ்த மிஷன் தமிழ்ப் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க முக்கிய பிரமுகரும், பாடசாலை உணவுக் கமிட்டி உறுப்பினருமான ஜனப் மீராமொகிதீன் நமது நிருபரிடம் கூறினர்.

ஜெமினி-சாவித்திரி ஜோடி நாளைமறுதினம்இங்குவருவர்

யாழ்ப்பாணம், வியா.

தமிழ்த் திரைப்பட உலகின் முன்னணி ஜோடிகளான ஜெமினி கணேசனும் சாவித்திரியும் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் ஒரு நடன அரங்கேற்றத்தில் கலந்து கொள்ளும் பொருட்டே இவர்கள் இங்கு வருகின்றனர்.

வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் நிதிக்காக யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் இம்மாதம் 29-ம் திகதி நடைபெறும் இவ் விழாவுக்கு வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமை தாங்குவார்.

இம்மாதம் 30-ம் திகதி மன்னார் அய்ன் தியேட்டரில் நிகழவிருக்கும் நடன அரங்கேற்றத்திலும் ஜெமினி - சாவித்திரி ஜோடியினர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளமபரம்

கேள்விப்பத்திர அறிவித்தல்

வவனியா நகரசபை

ஆறு கக்கூஸ் வண்டிகள் செய்து கொடுப்பதற்கு 'கக்கூஸ் வண்டிகள், என்ற தலைப்பிட்டு இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. பத்து ரூபாய் கட்டுப்பணம் செலுத்தி 8-8-67 நண்பகல் 12 மணிக்குமுன் கேள்விப்பத்திர படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இக்கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. 15-8-67 நண்பகல் 12 மணிக்குமுன் கேள்விப்பத்திரங்களை அனுப்ப வேண்டும். மேற்கொண்டு விபரங்கள் இக்கந்தோரில் வேலை செய்யும் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

M. பொன்னையா
தலைவர்.

நகரசபை,
வவனியா.
23-7-67. 35

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
பரயாதினங்களில் 4காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
எல். விஜயலெட்சுமி
நடித்த
இருவல்லவர்கள்

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
சாமா (SAAMA)
[சிங்களம்]

கேள்விப்பத்திர அழைப்பு அறிவித்தல்

இதனடியில் காணப்படும் இரு வேலைகளுக்கும் 1967-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ம் திகதி மு. ப. 10-00 மணி வரையும் என்னால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் யாவும் ரூபா 50/- இச்சபைக் காரியாலயத்தில் பிணைப்பணமாகச் செலுத்தியதன் பேரில் இணைப்பிரதிகளாக 1967-ம் ஆண்டு ஆவணி மாதம் 8-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் வழங்கப்படும் பத்திரங்களிலேயே கேட்கப்படல் வேண்டும்.

மூலப்பிரதி எனக்கும், இணைப்பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம் அவர்கட்கும் ஒரே திகதியில் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

மற்றைய வேண்டிய விபரங்களை இச்சபைக் காரியாலயத்தில் வேலை நாட்களில் நேரில் பார்வையிடலாம்.

வேலைகள் விபரம்

1. கண்டாவளை தெரு அமைத்தல்.
2. இராமநாதபுரம் வட்டக்கச்சி தெரு அமைத்தல்.

வீ. ஆனந்தசங்கரி,
அக்கிராசனர்,
கரைச்சிக்கிராமச்சபை.

கிளிநொச்சி,
25-7-67. 34

பிணையில் சென்றனர்

அநுராதபுரம், புதன்

அநுராதபுரத்தில் சிகிரிக் கொலாவையிலுள்ள காட்டில் கைது செய்யப்பட்ட பயங்கரக் கோஷ்டியினரையும், காரையும், மதவாச்சி பொலிசார், கோர்ட்டில் ஆஜர் செய்தனர்.

ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் ஐவரில் ஒருவர் புத்தபிக்கு. ஐவரையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல மாஜிஸ்திரேட் அனுமதித்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 27-7-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை. 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோடிசைபாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 மேலைத்தேய - கீழைத்தேய இசை.

பயங்கர வீ

ஊர்காவற்றுறை, புதன்

சமீபகாலமாக கரம்பன் நாரந்தனை ரோட்டில் மக்கள் போக்குவரத்துசெய்வதற்கு அச்சம் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

திருடர் நடமாட்டம்இந்த வீதியில் அதிகரித்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சமீபத்தில் கரம்பன் பெண்பாடசாலையொன்றில் லிகிதராகக்கடமையாற்றும் பெண்மணியின் நகையைத் திருட ஒருவர் முயன்றார் எனப் புகார் கூறப்பட்டுள்ளது. வீதிவழியே நடந்து கொண்டிருந்த ஒருவரிடம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் ரோச்லயிற் றைப் பறித்துக் கொண்டு சென்று விட்டார் எனவும் கூறப்படுகிறது.

தொழிலாளர் மோதல்

10 பேர் காயம்

சென்னை, ஜூலை 26

சென்னையை அடுத்த பல்லாவரத்தில் ஓரியண்ட் பார்மஸி என்ற மருந்துப் பொருட்கள் தயாரிக்கும் கம்பனி இருக்கிறது. இக் கம்பனியில் 77 தொழிலாளர், தொழிற்சங்கத்தில் சேர்ந்த காரணத்துக்காக வேலையினின்றும் நீக்கப் பட்டனர்.

வேலைநீக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். வேலைநிறுத்தத்தின்போது வேலைக்குச் சென்ற சில தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்தவர்கள் தாக்கினர்கள்.

இந்த மோதல் காரணமாக சுமார் 10 தொழிலாளர்களுக்குக் காயம் ஏற்பட்டது. ஒருவர் பலத்த காயமடைந்தார்.

பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

சர்வதேச எழுத்தறிவுதினம்

புதுடில்லி, ஜூலை 26

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 8ம்திகதியைச் சர்வதேச எழுத்தறிவு தினமாக அனுஷ்டிக்கும்படி மத்திய அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்களுக்குத் தெரிவித்துள்ளது.

REGAL JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Roger Browne & Scilla Bable
in
The Revenge of Spartacus
(In Technicolor)

கைத்தொழிலில் யாழ்ப்பாண மாவட்டவிருத்தி

சிறு கைத்தொழில்களில் யாழ்ப்பாண மாவட்டம் அடைந்துள்ள முன்னேற்றம் என்ன?

கைத்தறி நெசவுத் தொழில், தச்சுத்தொழில், மட்பாண்டத் தொழில், பனம்பொருட்கைத் தொழில், தென்னந்தும்புத் தொழில், இரும்புவேலை, நகைவேலை, தையல்தொழில் எந்த அளவுக்கு விருத்தயடைந்திருக்கின்றன? எத்தனை பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்?

ஈழநாடு'
[29-7-67]

வாரமலரில் வெளியாகும் கட்டுரையைப் படிக்கத் தவறாதீர்கள்.

சுன்னகம் பட்டினசபை

தலைவர் விளக்கம

சுன்னகம், புதன்

25-7-67 'ஈழநாடு' பத்திரிகையின் சுன்னகம் பட்டினசபைத் தொழிலாளர் விஷயமாகப் பிரசுரிக்கப்பட்ட செய்தி பற்றிபட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 3-6-67-ல் இருந்து 18-6-67 வரை முன்னறிவித்தலின்றி, ஒருவித காரணமுமின்றி நகரசுத்தித்தொழிலாளர் தொடர்ந்து பதினைந்து நாள் வராததையிட்டு 18-6-67-ல் உள்ளூராட்சி உதவி அதிபர் முன்னிலையில் ஒரு பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்பொழுதுகீழ்க்கண்ட முடிவெடுக்கப்பட்டது.

1. வேலைக்கு வராத பதினைந்து நாட்களில் சேவை முறியாதவாறு தொடர்ச்சியாகச் சேவைசெய்யப்பட்டதென எட்டு நாள் சம்பளம் சுன்னகம் பட்டினசபை சிபார்சுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. 1-7-67 நடைபெற்ற கூட்டத்தில் இவ்வனுமதி கேட்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

2. தொழிலாளர் முன்பெற்ற முற்பணத்திற்கேற்ப அரசாங்க நிதிப்பிரமாணத்துக்கமைய அடிப்படைச் சம்பளத்தின் நாற்பது வீதத்திற்கு கழிவு ஏற்படாதவாறு ரூபா நூறுக்கு மேற்படாது முற்பணம் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது: இதன்நிமித்தம் கணக்குப் பார்த்த பொழுது இந்த முற்பணம் பெறுவதற்கு ஒருவரும் தகுதியுடையவர்கள் அல்லவென அறியப்பட்டது. ரூபா 25/- வீதம் முற்பணம் வழங்க முற்பட்டும் ஒருவரும் அதைப்பெறவில்லை.

இதன்பின் தொழிலாளி முருகன் அனுமதியில்லாது மூன்றுநாள்வேலைக்கு வராதபோது விளக்கம்கோரப்பட்டது. ஆனால் அவர் விளக்கம் கொடாது மேலும் அனுமதியின்றி வேலைக்குவரவில்லை. இதனால் அவர் தற்காலிகமாக வேலையினின்றும் 11-7-67-ல் இருந்து நீக்கம் செய்யப்பட்டார். இதனால் நிரந்தர சேவையிலுள்ள நான்கு தொழிலாளரைத் தவிர இந்த 13 தொழிலாளர்கள் வேலைக்குவரவில்லை.

24-7-67-ல் உள்ளூராட்சி உதவிஆணையாளரின் ஆலோசனைப்படி 25-7-67 தொடக்கம் முருகனைத் தவிர்ந்த மற்றைய தொழிலாளர்களுக்கு வேலை வழங்கத் தலைவர் இசைந்தார்.

ஆனால் 25-7-67-ல் மேற்குறித்த தவறுன செய்தியை தொழிலாளர்கள் கொடுத்துள்ளபடியால் வேலைவழங்கத் தலைவர் சம்மதிக்கபட்டின சபையின் ஆகஸ்ட் மாதக் கூட்டத்தில் ஆலோசனைசெய்து அவர்களைவேலைக்குத் திரும்பிவருவதாக எழுதியகடிதம் ஆலோசித்து விடைகொடுப்பதாக தொழிலாளர்களுக்குத் தலைவர் எழுதியிருந்தார்.

வரி விளம்பரம்

தேவை

ஆட்கள் தேவை

பொருட்களை விற்பனை செய்வதற்கு சைக்கிளின் உள்ள ஆட்கள் தேவை. விபரங்களுக்கு இல.1/3 மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 2441

பூசகர்

மன்னார் பட்டினத்தில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு ஒரு பிராமணப் பூசகர் தேவை. சம்பளம் மாதம் 60-00 படித்தரம் மாதம் 45 சேர் அரிசி. இவை தவிர வீட்டு வசதியும் உண்டு. அர்ச்சனை வருமானம் பூசகர்க்கே. விரும்பியோர் ஆகஸ்ட் 15ம், 16ம், 17ம், 18ம் திகதிகளில் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். க. கார். வைத்திலிங்கம், முகாமையாளர், உப்புக்குளம், மன்னார். 2438

விற்பனைக்கு

கார்

EL தொடர்புடைய சொமசெற்கார் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் இல.6, பிரதானவீதி, யாழ்ப்பாணத்துக்கு தொடர்பு கொள்ளவும். 2442

For Sale: 12 Larchchams Land(divided orLot)on Brown Road Jaffna and 3 1/2 Larchchams with foundation for five shops on Kankesanthurai road Jaffna near Thattatheru Junction. Offers 8, First cross street Jaffna. 2443

வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடவீதியிலுள்ள 17-ம் இலக்க வீடு வாடகைக்கு கொடுபட இருக்கிறது. குடியிருப்பதற்கும் கைத்தொழில் நடாத்துவதற்கும் வசதியுண்டு. தேவைப்படுவோர் நேரில் பார்வையிடலாம். 2437

சேவை

கிருங்சாவ்ற் கிறைன்டிங் கிருங்சாவ்ற் கிறைன்டிங், சிலின்டர் றிபோறிங், சிலின்டர் பொலிஷிங் செய்து கொடுக்கப்படும். ராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். போன்: 7179 2417

வியாபாரம் பெருக விளமபரமசெய்க

பிரியாவிடை

இமையாணன், புதன்

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் துணைஅதிபராகக் கடமையாற்றிய திரு. சோமசுந்தரம் இராசகுல அரியரத்தினம் வவனியா மத்திய மகாவித்தியாலயத்திற்கு அதிபராக பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டும், அவரின் சேவையைப்பாராட்டுமுகமாகவும், வல்வெட்டித் துறை மக்களால் ஒரு பாராட்டு வைபவம் நடாத்தப்பட்டது.

இவர் இக்கல்லூரியில் இருபத்தாறு [26] வருடகாலமாக கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும், சாரண இயக்கத்திலும் சேவை புரிந்துள்ளார். முதலாம் திகதி தொடக்கம்மாற்றலாகிச்செல்லும் இவருக்கு வல்வை மக்கள் தங்கப் பதக்கம் உட்பட பல பொருட்கள்பரிசளித்தனர்.

இப்பொழுது திரையிடப்படுகிறது

கிங்ஸ்லி
[கொட்டாஞ்சேனை]
ராஜ்
[நீர்கொழும்பு]
விஜயா
[மட்டக்களப்பு]

காமினி
[மருதானை]
வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
ஸ்ரீ கிருஷ்ணா
[திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட
கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல்
ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த

ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
அன்பேவா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. வீ. திருலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கனடாவில் டி கோல் ஏற்படுத்திய பரபரப்பு

கியூபெக் மாகாணத்தின் சுதந்திரத்துக்கு வழிகோலும் வகையில் அமைந்த பேச்சு

கனடாப் பிரதமர் பியேர்ஸனும் எதிர்க்கட்சித் தலைவரும் கண்டனம்

ஒட்டாவா, ஜூலை 26

கனடாவுக்கு விஜயம் செய்துள்ள பிரெஞ்சு ஜனதிபதி டி கோல், அங்கு பேசியுள்ள ஒரு பேச்சில், கியூபெக்வாழ் பிரெஞ்சு மொழிபேசும் மக்களைக் கனடா அரசாங்கத்துக்கெதிராகத் தூண்டி விடும் வகையில் பேசியிருப்பதைக் கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியேர்சன் வெகுவாகக் கண்டித்துள்ளார்.

கனடாவில் நடைபெறும் 'எக்ஸ்போ-67' என அழைக்கப்படும் சர்வதேசப் பொருட்காட்சியில், நேற்று பிரெஞ்சு ஜனதிபதி டி கோல், பிரெஞ்சு தினத்தை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில், இறுதிக் கட்டத்தில், 'கனடா நீடுழி வாழ்க!' என்று கூறிவிட்டு, அடுத்தாற்போல், 'சுதந்திர கியூபெக் நீடுழி வாழ்க!' என்றும் கூறினர்.

கியூபெக், கனடாவில் ஒருபது, கனடா மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாததொன்று என்று கனடாப் பிரதமர் மேலும் தெரிவித்தார்

கனடா எதிர்க்கட்சித்தலைவரும் முன்னாள் பிரதமருமான திரு. டெய்பென் பேக்கர், டிகோலின் பேச்சைப் பலமாகக் கண்டித்தார்.

தடுக்க வேண்டும்

பிரெஞ்சு ஜனதிபதி கனடாவில் தங்கியிருக்கும் வரை அத்தகைய பகிரங்கப் பேச்சுக்களில் ஈடுபடாது தடுக்கப்படவேண்டுமென்று அவர், பிரதமர் பியேர்ஸனிடம் கோரியுள்ளார்.

இதற்கிடையில் பிரெஞ்சு ஜனதிபதியுடன் தாம்பேச்சு வார்த்தைகள் நடாத்தப் போவதாகவும், பேச்சு வார்த்தைகளின் இறுதியில், சம்பந்தப்பட்ட பிரச்னைமீது தமது கருத்துக்களையே பிரெஞ்சு ஜனதிபதியும் கொண்டிருப்பார் எனத் தாம் நம்புவதாகவும் கனடாப் பிரதமர் பியேர்ஸன் தெரிவித்துள்ளார்.

கியூபெக்

கியூபெக் மாகாணமாகும். அங்கு வாழும் மக்கள், பிரெஞ்சு மொழி பேசுபவர்கள். அவர்கள் தமக்குத் தனி ராஜ்யம் கோரி வந்துள்ளனர் ஆங்கிலம் பேசும் கனடாவில், இம்மக்கள் சிறுபான்மையினராகவிருக்கிறார்கள்.

பிரதமர் கண்டனம்

மந்திரிசபையின் இரண்டு அவசரக் கூட்டங்களின்பின், பிரெஞ்சு அதிபர் டி கோலின் பேச்சைக் கண்டித்து கனடாப் பிரதமர் பியேர்ஸன் அறிக்கை வெளியிட்டார்.

கனடாவிலுள்ள மக்கள் அனைவரும் சுதந்திரமானமக்களே எனறும், யாருக்கும் அங்கு விடுதலை அளிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் ஒரு சிறுபான்மையினர் கனடா முழுவதையும் அளிக்கஇடமளிக்க முடியாதென்றும் பியேர்ஸன் கூறினர்.

ஏற்றுக்கொள்ள முடியாது

சுதந்திர கியூபெக் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கனடா மக்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளனர் என்றும் பியேர்ஸன் கூறினர்.

ஜோர்தான் குற்றச்சாட்டு

அம்மான், ஜூலை 26

ஜோர்தான் ஆற்றின்மேற்குப் பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு, அவர்களுடைய மத உரிமைகளை வழங்க இஸ்ரேல் அதிகாரிகள் மறுப்பதாக ஜோர்தான் குற்றஞ் சாட்டியுள்ளது.

மே. ஜெர்மனி, அமெரிக்காவிடம் இந்தியா கவலை தெரிவித்துள்ளது

பாகிஸ்தானுக்கு அமெரிக்க டாங்கிகள் விற்பது பற்றி

புதுடில்லி, ஜூலை 26

பாகிஸ்தானுக்கு அமெரிக்க டாங்கிகள் விற்கப்படவிருப்பதையிட்டு, மேற்குஜெர்மனி, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிடமும் இந்தியா தனது ஆழ்ந்தகவலையைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் தயாரிக்கலையைத் தெரிவித்தார். கப்பட்ட டாங்கிகளைப் பாகிஸ்தானுக்கு விற்க மேற்கு ஜெர்மனி முயல்வதாக அமெரிக்க வெளிவிவகாரத் துணைக்கமிட்டி வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்தே இந்தியா இவ்விதம் கவலை தெரிவித்துள்ளது.

அழைக்கப்பட்டனர்

புதுடில்லியிலுள்ள மேற்கு ஜெர்மனி, அமெரிக்கத் தூதரகப் பொறுப்பதிகாரிகள் நேற்று இந்திய வெளியுறவுக் காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டனர். அவர்களிடம் இந்திய வெளியுறவுக் காரியதரிசி திரு. சி. எஸ். ஜா இந்தியாவின் கவலை தெரிவித்தார்.

'பொய்'

புதுடில்லியிலுள்ள மேற்கு ஜெர்மனித் தூதரகம், பாகிஸ்தானுக்கு அந்நாடு இராணுவ ஆயுதங்களை விற்க முயலுகின்றதென்ற செய்தியை 'முற்றிலும் பொய்யான கூற்று' என மறுத்துள்ளது. அப்படி விற்கும் நோக்கம் மேற்குஜெர்மனிக்கு ஒருபோதும்இருந்ததில்லையெனவும் அது தெரிவித்துள்ளது.

மறுத்தது

பாகிஸ்தானுக்கு அமெரிக்க டாங்கிகளை விற்பது பற்றி மேற்கு ஜெர்மனியிடம் அமெரிக்கா விளக்கம் கோரியுள்ளது என்ற செய்தியை அமெரிக்க ராஜாங்க இலாகா ஊர்ஜிதம் செய்யவோ அல்லது மறுக்கவோ மறுத்துவிட்டது.

ஐ. அ. கு. வெளியிட்டுள்ள போர்க்கால பட்ஜெட்

கெயிரோ, ஜூலை 26

இஸ்ரேலுடன் ஒரு நீண்டகாலப் போருக்குத் தயாராகும் வகையில், ஐக்கிய அரபுக் குடியரசு, போர்க்கால சிக்கன வரவு-செலவுத் திட்டமொன்றை வெளியிட்டுள்ளது.

இவ் வரவு செலவுத் திட்டத்தில், அதிக வரிகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், அரசாங்கத் திட்டங்களும் குறைக்கப் பட்டுள்ளன.

50 சத விகிதம்

கார் முதலிய சொகுசுப் பொருட்களுக்கு விற்பனை வரி 50 சத விகிதம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

சீனி, தேயிலை போன்ற சாதாரண மனிதனின் பொருட்களின் விலையும் 10 தொடக்கம் 20 சத விகிதம் வரை உயருமென எதிர் பார்க்கப்படுகிறது.

ஆற்றில் மூழ்கி 8 போ மரணம்

ஷில்லொங், ஜூலை 26

அஸ்ஸாமில் 8 பேர் பிரம புத்திர ஆற்றின்மீது படகில் செல்லும்போது படகு கவிழ்ந்து, நீரில் மூழ்கி இறந்தனர்.

துருக்கியில் நில அதிர்ச்சி

பாப்பரசர் வந்தார்

அங்காரா, ஜூலை 26

அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து துருக்கியில் சில பகுதிகளில் இன்னும் நில அதிர்ச்சிகள் ஏற்பட்டுவருகின்றன.

பாப்பரசர் போல்

இதற்கிடையில், பாப்பரசர் போல், தமது இரண்டு நாள் விஜயத்தில், துருக்கி வந்து இன்று சேர்ந்துள்ளார்

அமெரிக்க இனக்கலவரங்களில் 30 பேர் கொல்லப்பட்டனர்

டிட்ரொயிட்டில் இப்போது அமைதி

வாஷிங்டன், ஜூலை 26

அமெரிக்காவிலுள்ள மிச்சிக்கன் ராஜ்யத்தில், டிட்ரொயிட் நகரத்தில், கடந்த 2 தினங்களாக நடைபெற்ற இனக் கலவரங்களில் 30 பேர் கொல்லப்பட்டனர். 14,000 க்கும் அதிகமானோருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. 2,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், உடைமைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் ரூ 150 கோடி எனக் கணிக்கப்பட்டுள்ளது.

டிட்ரொயிட் நகரில் சமஷ்டித் துருப்புகளும், தேசிய காவற்படையினரும் நிலைமையைக் கட்டுப்படுத்தியுள்ளனர். இன வெறியர்களிடமிருந்து நகரை அவர்கள் மீட்டுள்ளனர். அங்கு இப்போது அமைதி நிலவுகிறது ஆனாலும், நெருக்கடி நிலைமை இன்னும் நீங்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

டிட்ரொயிட்டில் ஆரம்பமான இனக்கலவரங்கள், படிப்படியாக 7 பட்டினங்களுக்குப் பரவின.

மேலும் 2,500

நேற்று முன்தினம் மிச்சிகன் ராஜ்யத்துக்கு 5,000 சமஷ்டித் துருப்புகளை அனுப்பி வைத்த அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன், நேற்று மேலும் 2,500 துருப்புகளை அங்கு அனுப்பியுள்ளார்.

கென்னடி

இனக்கலவரங்கள் கட்டுக் கடங்காமல் செல்வதாகவும் அவையே அமெரிக்காவின் மிக மோசமான உள்நாட்டுப் பிரச்னையாக வளர்ந்து வருவதாகவும் செனேட்டர் றொபேட் எவ். கென்னடி எச்சரிக்கை செய்துள்ளார்.

லூதர் கிங்

அமெரிக்க நீக்ரோத் தலைவர் டாக்டர் மார்டின் லூதர் கிங், ஏழை மக்களின் வாழ்க்கையில் நீவிர மாறுதல்கள் செய்தாலன்றி, அமெரிக்காவில் ஸ்திரத்தன்மையை நிலை நாட்ட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

லிபியா மறுப்பு

திரிபோலி, ஜூலை 26

ஐ. அ. கு. விமானங்கள் தனது விமான நிலையங்களில் வந்து தங்கிச் செல்ல லிபியா அனுமதி மறுத்துள்ளது.

மறுப்புக்கான காரணத்தை அது தெரிவிக்கவில்லை.

அமெரிக்க ராஜாங்க இலாகா

மறுப்பும் கவலையும

வாஷிங்டன், ஜூலை 26

மேற்கு ஆசியப் போரில் கைப்பற்றப்பட்ட அமெரிக்கப் போர் ஆயுதங்களைப் புதிய ஆயுதங்கள் பெறுவதற்காக இஸ்ரேல் அமெரிக்காவிடம் கையளிக்க முன்வந்துள்ளதென்றசெய்தியை அமெரிக்க ராஜாங்கஇலாகா மறுத்துள்ளது.

கவலை

இஸ்ரேலைத் தூண்டிவிட்டதாகவும், அதற்குத் துணபுரிந்ததாகவும் ஐ. அ. குடியரசு ஜனதிபதி நாஸர், அமெரிக்கா மீது மீண்டும் குற்றஞ் சாட்டிப் பேசியிருப்பது பற்றி அமெரிக்க ராஜாங்க இலாகா தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

சட்ட சபையில் தோல்வியெனில் புதிய தேர்தல் வரும்

மத்திய பிரதேச முதல் மந்திரி திரு. மிஸ்ரா கூறுகிறார்

போபால், ஜூலை 26

மத்தியப் பிரதேச முதன் மந்திரி திரு. மிஸ்ரா, தாம் பதவியில் தொடர்ந்து இருப்பதற்காகக் குதிரை வியாபாரத்தில் ஈடுபடப் போவதில்லையென்று இங்கு அறிவித்தார்.

நிலைமையை முற்றுமுழுதாக ஆராய்ந்து, காங்கிரஸிலிருந்து விலகியவர்கள் மீண்டும் தமது கட்சிக்கு வரவிரும்பினால், தாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

துவேஷம் கிடையாது

கட்சியிலிருந்து விலகிய அங்கத்தவர்களிடம் தமக்கு எவ்வித துவேஷமும் கிடையாது என்றும் முதன்மந்திரி கூறினர்.

சட்ட சபையில் தமது கட்சி தோற்கடிக்கப்பட்டால், சபையைக் கலைத்து, மக்களிடம் மீண்டும் வாக்கெடுப்புக்கு செல்வதெனத் தாம் தீர்மானித்துள்ளதாகவும் திரு. மிஸ்ரா அறிவித்தார்.

புதுடில்லியில் நில அதிர்ச்சி

புதுடில்லி, ஜூலை 26

புதுடில்லியில் நேற்றிரவு 9-20 மணிக்கு, இலேசான நில அதிர்ச்சி ஏற்பட்டது. ஒரு விநாடி மட்டும் நீடித்த இவ்வதிர்ச்சியினால், எவ்வித சேதமும் ஏற்படவில்லை. அதிர்ச்சியைத் தொடர்ந்து 'கிடுகிடு' எனச்சப்தம் கேட்டது.

நக்ஸல்பாரியில் 125 பேர் சரண்

கல்கத்தா, ஜூலை 26

நக்ஸல்பாரியிலுள்ள கோடி பாரி பகுதியில் 125 தீவிரவாதிகள் தாமாகவே பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

இவர்களில் 18 பேர், கொள்ளை, சூறை ஆகிய குற்றங்களுக்காகத் தேடப்பட்டு வந்தவர்களாவர்.

நக்ஸல்பாரியிலிருந்து தீவிரவாதிகள் தப்பியோடாது, முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சீன ரயில்கள் செல்லவில்லை

ஹொங்கொங், ஜூலை 26

சென்ற திங்கட்கிழமையிலிருந்து சீனாவிலிருந்து ரயில்கள் எதுவும் ஹொங்கொங்குக்குச் செல்லவில்லை.

ஹொங்கொங்கில் ஓரிடத்தில் நடைபெற்ற கடுமையான சம்பவம் ஒன்றே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. இச்சம்பவத்தின்போது, ஒரு ரயில் பாதை தகர்க்கப்பட்டது.

கவ்லூனில்

ஹொங்கொங்கிலுள்ள கவ்லூன் மாகாணத்தில், கம்யூனிஸ்ட் சீனர்கள் வன்முறைச்செயல்களில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

வறுமையில் ஆழ்ந்து கிடக்கும் ஒரு நாட்டிற்கு உணவுதான் தெய்வம். அதைவழிபட விவசாயமே சிறந்த மார்க்கம்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

பராபவம் பிலவங்கவரு ஆடி 11 (27-7-67)

நிதி அமைச்சரின் திறமை

'அறநனைந்தவனுக்குக் கூதல் என்ன குளிர் என்ன?' என்பது தமிழில் உள்ள ஒருபழமொழி. இந்தநிலையில்தான எல்லாப் பொருள்களின் விலையுமே விஷம்போல் ஏறியுள்ள இச்சமயத்தில் நிதிஅமைச்சர் என்னத்தைத்தான் புதிதாகச் சொல்லப் போகிறார் என்ற அசமந்தப்போக்குடன் பொதுமக்கள் வரவு-செலவுத் திட்டயோசனைகள் பற்றி அதிகம் அக்கறை செலுத்தாதிருந்தனர். நிதி அமைச்சர் தெரிவித்துள்ள யோசனைகளும் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில, பொதுமக்களை உடனடியாக நேரடியாகப் பெருமளவில் பாதிக்கமாட்டாதென்பது தெளிவு. இதற்குமுன்னைய வருடங்களில் துண்டுவிழும் தொகைகளைச்சரிக்கட்டுவதற்கு அப்போதைய நிதி அமைச்சர்கள் எடுத்த நடவடிக்கைகளைவிட தேசிய அரசாங்கத்தின் நிதிஅமைச்சர் இம்முறை துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்குத் தெரிவித்துள்ள யோசனைகள் அவரின் திறமைக்குச் சான்று.

இறக்குமதி லைசன்ஸ்கட்டணமாக இதுவரை இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் ஒருசதவீதமே அறவிடப்பட்டுவந்தது. இனி இந்தக்கட்டணம் பத்துசதவீதமாக அறவிடப்படும். அரசாங்கம் இறக்குமதி செய்யும் அரிசி, சீனி, மாவு ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கும் குழந்தைகளின் பால்மாவு, பருத்திநூல், மருந்துகள் மற்றும் மண்வெட்டி, அலவாங்கு போன்ற சிறிய விவசாய உபகரணப் பொருள்களுக்கும் இந்தக்கட்டண உயர்வு இருக்காது. இதன்படி பார்த்தால் அத்தியாவசியப் பொருள்களல்லாதவைகளின் இறக்குமதிக் கட்டணம்தான் உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும் அதுவும்கூட இறக்குமதியாளர்கள்மீதே 'தாக்கம்' ஏற்படுத்தும் என்று கூறலாம். சைக்கிள் சிறியமெஷின்கள், மோட்டார் கார் உதிரிப்பாகங்கள் ஆகிய பொருள்கள் அவசியமில்லையென்றுகூறமுடியாது. இவைபோன்ற பொருள்களின் இறக்குமதி லைசன்ஸ் கட்டணம் அதிகரித்ததும் அந்தத்தொகையைப் பண்டங்களின் விலையை அதிகரிப்பதன் மூலமே இறக்குமதிவர்த்தகர் தம்மது செலவைச் சரிக்கட்டுவர். இதுதவிர சிறிய கைத்தொழில்களுக்குத்தேவையான மூலப்பொருள்கள்பலவும்வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. லைசன்ஸ் கட்டண உயர்வினால் மூலப்பொருள்களின் இறக்குமதிச்செலவு அதிகரிக்கும். பொருளை உற்பத்தி செய்வது, அவைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு செல்லுதற்கான போக்குவரத்துச்செலவும் அதிகரிக்கும் இவைபடிப்படியாகப் பொதுமக்கள் மீதேவந்து குவியும். புகையிலை மீதான கலால்வரி அதிகரிக்கப் பட்டிருப்பது மற்றொருமுக்கிய அம்சம். இதனால் சிகரட் விலைஅதிகரித்திருக்கிறது. இந்திய நிதிமந்திரி மொரார்ஜி தேசாய் கூறியதுபோல், சிகரட் புகைப்பது உடலுக்குக் கெடுதியானதால் மக்களின் ஆரோக்கியத்தைக் கருதி நமதுநிதி அமைச்சரும் புகையிலை மீதான கலால் வரியை அதிகரித்திருக்கலாம்.

முன்னூறு ரூபாக்கும் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் அரசாங்க, உள்ளூராட்சிச் சேவை ஊழியர்களுக்கு இருபதுரூபாய் வரையில் விசேஷ அலவுன்ஸ் வழங்கப்படவிருக்கிறது. அரசாங்க ஊழியர்களைத் திருப்திப்படுத்தவும் அரசாங்கத்துக்கு விசுவாசமாக உழைக்கவும் அதன் மூலம் அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் சீராக அமுல் நடத்த முடியுமென்றும் அரசாங்கம் நம்புகிறது. அந்த நம்பிக்கை வீணாகி விடக்கூடாது.

ஆனால் ஊதிய உயர்வு மூலம் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுச் சுமையை எத்தனை நாளைக்கு, எத்தனை பேருக்குக் குறைக்கமுடியும்? இது சம்பள உயர்வல்ல; ஓர் இடைக்கால ஏற்பாடுதான். ஆனாலும் சம்பள உயர்வு கோரி வரும் ஆசிரியர்கள் என்னசெய்வது? அரசாங்க ஊழியர்களுக்குள்ளதுபோல இலவச பிரயாணவசதி, இலவச வைத்தியவசதி போன்ற வசதிகள் இல்லாத தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதெப்படி?

ஊதியத்தை அதிகரிப்பதற்குப்பதிலாக உற்பத்தியைப் பெருக்க ஒருங்கிணைக்கப்பட்ட துரிதகாலத் திட்டங்களைக் கொண்டுவந்து அமுல் செய்தால் சிலரின் திருப்திக்காகப்பலரின் அதிருப்தியைத்தேட நேரிடாது.

உற்பத்திச்செலவு வரி ஐந்துசத விகிதத்திலிருந்து ஒருசத விகிதத்துக்குக் குறைக்கப்பட்டிருப்பதால் யாழ்ப்பாணத்து சுருட்டுத் தொழிலுக்கு சிறிது நல்ல காலம் பிறக்கலாம்.

எல்லோரையும் எல்லா நேரமும் திருப்திப்படுத்த முடியாதுதான் நிதி அமைச்சர் தம்மைப் பொறுத்தவரையில்தமது கடமையைத்திருப்தியாகவும் திறமையாகவும் செய்திருக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டலாம்.

சித்த ஆயுர்வேத வளர்ச்சிக்கு கைதடியில் அத்திபாரம்

(எம். எஸ். சுந்தரம், இணைக்காரியதரிசி, அ. இ. சித்தாயுர்வேத சங்கம்)

இன்று கைதடியில் சித்த ஆயுர்வேத வைத்திய சாலைக்கான அத்திபாரக்கல்லை சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனா நாட்டுகிறார்.

இலங்கையில் தமிழ்பேசும் மக்களில் பெரும்பான்மையினரால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் சித்த ஆயுர்வேத வளர்ச்சித்துறையில் இன்று ஒரு முக்கிய தினமாகும்.

இலங்கையின் அண்டை நாடுகளில் எல்லாம் பண்டைக்காலந்தொட்டு மக்களின் ஆரோக்கியத்தைக் காப்பாற்றி, நோய்களிலிருந்து விடுதலை கொடுத்துவந்த தேசிய சிகிச்சை முறை இன்று அந்தந்த அரசாங்கங்களால் ஆதரிக்கப்பெற்று வளர்க்க முற்பட்டிருப்பினும் இலங்கை அரசினர் தேசிய சிகிச்சை முறையாகிய ஆயுர்வேதத்தைவளர்ப்பதில் மற்ற அண்டை நாடுகளிலும் பார்க்க முன்னணியில் நிற்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இன்று நடைபெறும் தேசிய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஆஸ்பத்திரிசுவீப்என்றபெயரில் நடைபெற்றுவந்தது தெரிந்ததே. அந்த ஆஸ்பத்திரிசுவீப்பை, அரசினர்ஆரம்பித்ததே ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளை இலங்கையின் பல பாகங்களிலும் நிறுவும் நோக்கமென்பதாகத் தெரிவிக்கப்பட்டது. சுவீப் மூலம் சேகரிக்கப்பட்ட அப்பணத்தை ஆரம்பித்த நோக்கத்திற்காகச் செலவிடுவதிலிருந்து அதிகாரிகள் பின்வாங்கிவந்தனர். அகில இலங்கை சித்த ஆயுர்வேத சங்கம் போன்ற ஸ்தாபனங்களின் இடைவிடா வேண்டுகோள் காரணமாக அப்பணத்தை அயுர்வேத வளர்ச்சிக்குச் செலவிட முற்பட்டார்கள். விஸ்தரிக்கப்பெற்ற கொழும்பு ஆயுர்வேத ஆஸ்பத்திரி, அனுராதபுர ஆயுர்வேத ஆஸ்பத்திரி, இரத்தினபுரி ஆயுர்வேத ஆஸ்பத்திரி ஆகியவையும் நாவின்னையில் நிறுவப்பட்டிருக்கும் ஆயுர்வேத ஆராய்ச்சிநிலையமும், ஆயுர்வேத வளர்ச்சிக்குச் செய்யப்படும் ஒரு திட்டமான முயற்சியாகும். பல்வேறு அரசியல் காரணங்களால் காலந்தாழ்த்தி இன்று இலங்கையின் வடபகுதியில் கைதடியில் சித்த ஆயுர்வேத ஆஸ்பத்திரியை நிறுவ அரசினர் முற்பட்டு கல்நாட்டு வைபவம் நடைபெறுகிறது. சித்த ஆயுர்வேதப் பிரிவு தனக்கென ஓர் ஆஸ்பத்திரியை ஆரம்பிக்கும்.

வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் உள்ள அதிகமான ஸ்தலஸ்தாபன சபைகளில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் அமைக்கப்பெற்று மிகச் சிறந்த முறையில் பொதுசனங்களுக்குத் தொண்டாற்றி வருவதை நாம் காண்கிறோம். அவ் வைத்திய சாலைகளில் வைத்தியரின் இடைவிடா கண்காணிப்பின் கீழிருந்து சிகிச்சை செய்யவேண்டிய நோயாளர் பலர் சிகிச்சைக்கு வருகிறார்கள். அவ்வித நோயாளருக்கு அவ் வைத்தியசாலைகளில் பூரண சிகிச்சை கொடுக்க வசதியற்றிருப்பது ஒரு பெருங்குறை. அவ்வித நோயாளரை ஆங்கில ஆஸ்பத்திரிகளுக்கே அனுப்ப வேண்டிய கட்டாயம் அவ் வைத்திய சாலை வைத்தியருக்கு ஏற்படுகின்றது. ஆங்கில ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படும் அந்

[5-ம் பக்கம் பார்க்க]

ஆலயவழிபாட்டில்

தடையும் வேண்டாம் பலவந்தமும் வேண்டாம்

— சி. கதிரவேலுப்பிள்ளை —

[பா. உ. கோப்பாய்]

தெய்வவழிபாடு இயல்பாக நிகழும் ஆத்மீக இயக்கம். இவ்வழிபாட்டை சமயம் ஒரு கடமையாக வகுத்துள்ளது. சமுதாயம் இதனை உரிமையாகக் கணிக்கிறது. வழிபாட்டிற்காக ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று ஆத்மீக இயக்கத்தின் நல்லியல்பையும், இன்றியமையாமையையும் நம்முன்னோர் கூறிவைத்தார்கள். இந்த ஆத்மீக இயக்கத்தை, சமயக் கடமையை, அடிப்படை உரிமையை சாதி காரணமாகத் தடைசெய்வது பெருங்குற்றமாகும். இத்தகைய தடை ஆத்மீக இயக்கத்திற்கு இடையூறாகும். சாதிச் செருக்கு ஆணவத்தின் இயக்கம். ஆணவம் ஆத்மீகத்தை தடைசெய்வது குற்றமாகும்.

சாதித்தடை ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக்கு பாதகம் செய்வதால் மனிதகுலம் ஒரே ஆத்மீக சமுதாயமாக இயங்குவதற்கு சாதிவேற்றுமை ஒருதடையாகிறது. வழிபாட்டில் சாதித்தடை அன்பு வழிக்குமாறானது. அன்னும் அறிவு விளக்கத்துக்கும் மாறானது. இத்தகைய சாதி வேற்றுமைகள் அறியாமையின் இயக்கமாகும். வழிபாட்டில் சாதித் தடையை வைத்திருப்பது சமய தத்துவங்களுக்கும், சன்மார்க்க வாழ்விற்கும் பொருந்தாத செயலாகும். மேலும் சைவ சமயத்திற்கே இத்தகைய சாதித்தடை புறம்பானது. சைவசமயம் ஏற்கும் சாஸ்திரங்களில் [illegible] ஆதாரம் இல்லை. நாம் ஆலயங்களிலிருந்து வெளியே தடை செய்து நிறுத்தும் சாதியார் வேதத்தில் சொல்லப்படவில்லை. அவர்கள் கோயில்களுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று வேதத்தில் கூறப்படவில்லை. ஆகமங்களில் கூட வேளாளர், கோவியர், நளவர், பள்ளர், பறை

[5-ம் பக்கம் பார்க்க]

இன்றைய பலன்

27-7-67
வியாழக்கிழமை
[ஆடிமாதம்11-ந்திகதி]

நட்சத்திரம் - உத்தரட்டாதி பகல் 2-31 வரை
மேல் ரேவதி
திதி-ஷஷ்டி
சுபநேரம் 4-31-6-01
ராகுகாலம் 1-30-3-00

மேடம்- வாக்கு விருத்தி
ரிஷபம்- பொதுசன உறவு
மிதுனம்- ஆசார ஒழுக்கம்
கடகம்- இதயத் துயர்
சிம்மம்- தொல்லை மிகுதி
கன்னி- குடும்ப நலன்
துலாம்- அன்னியர் பகை
விருச்சிகம்- பிதாவழி வரவு
தனுசு- பிரயாண நன்மை
மகரம்- எண்ணியது கைகூடும்
கும்பம்- பொருள் விரயம்
மீனம்- சோர்வு மனம்

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

நாட்டிலும் நகரிலும்

பஞ்சபாண்டவருள் கடைக்குட்டியாகிய சகாதேவனை கண்ணபகவான் ஒருநாள் கூப்பிட்டு, பாரத யுத்தம் ஏற்படாமல் தடுப்பது எப்படி என்று கேட்டார். சகாதேவன் ஒரு பெரிய மனதத்துவஞானி. அவனுக்கு உட்பாந்திரம் எல்லாம்விளங்கும். உடனே அவன் சொன்னான் 'கன்னனையும் பார்த்தனையும் கொல்ல வேண்டும்; திரௌபதியின் குழலைக் களைந்து வெட்டி எறிய வேண்டும்; உன்னை நான் கட்டி வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் மகாபாரதயுத்தம் வராது' என்றான்.

''பாராளக் கன்னனிகற் பார்த்தனையும் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற்றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்நான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம் மாபாரத மென்றான்.''

கண்ணன் உடனே கேட்டான். 'மற்ற விஷயங்கள் எல்லாம் செய்தாலும் என்னை எப்படிக் கட்டப் போகிறாய்' என்று.

கண்ணபரமாத்மாவை எப்படிக் கட்டுவதென்று யோகஞானியாகிய சகாதேவனுக்குத் தெரியும். தன் மனத்துக்குள்ளேயே அவரைக் கட்டிவைத்து விடுவான். இது கண்ணனுக்கும் தெரியும்.

ஃ ஃ ஃ

உலகத்திலே இப்பொழுது எத்தனையோ இடங்களில் உலக யுத்தம் வரக்கூடிய சிறு யுத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வியட்நாம் ஒன்று, மத்தியகிழக்கு இன்னொன்று. பேரரசுகள் இவற்றில் சம்பந்தப்பட்டுள்ளன. எந்தச் சமயம் உலக மகாயுத்தம் மூளுமோஎன்று எல்லோரும் கவலைப்படுகிறார்கள்.

உலக யுத்தம் வராமல் தடுப்பது எப்படி என்று கேட்க இன்று ஒரு கண்ணனுமில்லை, அதற்கு மறுமொழி சொல்ல ஒரு சகாதேவனுமில்லை.

ஆகையால் அடியேன் ஒரு யோசனை தெரிவிக்க முற்பட்டுள்ளேன். அது சரியானதோ, பிழையானதோ, கெட்டதோ, நல்லதோ, யான் அறியேன். நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்

ஃ ஃ ஃ

அபின், கஞ்சா போன்ற போதை தரும் வஸ்துக்களைப் போல மர்ஜுவானா, ஹிரோயின், எல். எஸ். டி. என்று பல புதிய சரக்குகள் இப்பொழுது மேனாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உன்மத்தம் மிக்க ஒரு மிருகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இப்படி ஒரு சரக்கில் ஒரு டோஸ் கொடுத்துவிட்டால் அது பரமசாதுவாக மாறிவிடுகிறது. விஞ்ஞான வைத்தியர்கள் இப்படிப் பல வகையான மருந்துச் சரக்குகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவை சூரணம், தைலம், கஷாயம், ஊசி முதலிய பல வகைகளில் உள்ளன.

ஒரு மனிதனிலோ அல்லது ஒரு மிருகத்திலோ அல்லது வேறு எந்தப் பிராணியிலோ கோபத்தைக் கிளப்பவும் சாந்தத்தைக் கொடுக்கவும் இன்றைய விஞ்ஞான உலகம் பல மருந்துச்சரக்குகளைக் கண்டுபிடித்திருக்கிறது.

ஆக்கிரமிப்பும் ஆக்கிரோஷமும் நிறைந்த சில மனிதர்களுக்கு சாந்தம் அளிக்கும் சரக்கில் ஒரு 'டோஸ்' ஏற்றிவிட்டால எவ்வளவு ஆனந்தமாயிருக்கும் பாருங்கள்.

உதாரணமாக மா-ஸே-

[5-ம்பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையில்

அரசாங்க பத்திரங்களில் தமிழ்இல்லை; தமிழ்மட்டுமே தெரிந்தவர்கள் அவதி

செயலதிறன் கொண்ட புதிய வரியிறுப்பாளர் சங்கம

ஐ. தே. கட்சி அங்கத்தவர் முயற்சி

— நமது நிருபர் —

திருக்கோணமலை, புதன் திருக்கோணமலைக் காரியாதிகாரி அலுவலகத்திற்குச் சென்று தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தக விஷயமாகவும், வேறு காணி சம்பந்தமான விஷயமாகவும் பத்திரங்கள் பெறுகின்ற தமிழ் மக்கள் அந்தப் பத்திரங்களில் காணப்படும் தனிச் சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் மட்டுமே கண்டு செய்வதறியாது திகைக்கின்றனர். சிங்களமும், ஆங்கிலமும் சிறிதும் தெரியாத தமிழ்மக்கள் தங்கள் கருமங்களை நிறைவேற்ற முடியாது திணறும் இந்நிலை பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியையும், வேதனையையும் அளித்துள்ளது. தமிழ் மொழி சட்ட விதிகள் அமுலாகி இத்தனை மாதங்களாகியும் அதுவும் தமிழ்ப் பிரதேசமான திருக்கோணமலையிலேயே இத்தகைய நிலைமை நிலவுவது வருந்தற்குரியது என இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

சமரசம எற்படும

1960-ம் ஆண்டு முதலிக்குளம் என்ற இடத்தில் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டகாணியைப் பெற்றுக் கொண்டவர்கள் விவசாய வசதிகள் எதுவும்தங்களுக்கு செய்துதரப்படவில்லைஎன்று காரணம்காட்டிஅதனைக் கவனிக்காமலே விட்டு விட்டனர். இப்பொழுது அரசாங்கத்தினர் இந்தப் பகுதியில் வாய்க்கால்களை வெட்டிய தறிந்த காணிபெற்றவர்கள் முதலிக்குளக் காணியை வெட்ட முற்பட்டனர். நிலைமை அறிந்த அரசாங்க அதிபர் திரு. சோமபால குணதீராவும், கோமரசங்க டவல காரியாதிகாரியும் அங்கு சென்று காணியை ஒருவரும் வெட்டவேண்டாமெனக் கேட்டு காணியை வெட்டியவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முற்பட்டனர். இது விஷயம் அறிந்த திருக்கோணமலை நகரசபையின் 2-ம் வட்டார உறுப்பினரும் ஐ.தே.க. பிரமுகருமான திரு. வி. ஆர். நவரத்தினராசாஅரசாங்க அதிபர், காரியாதிகாரி ஆகியோருடன் கலந்துபேசி மேற்கொண்டு எதுவித திடீர் நடவடிக்கையும் எடுக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டதன் பேரில் அரசாங்க அதிபர் ஒரு சமரச நிலைக்கு ஒப்புக்கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

வரியிறுப்பாளர் சங்கம்

சில ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கோணமலையில் உருவாக்கப்பட்ட வரியிறுப்பாளர்சங்கம் செயல்படாதுவிடவே திருக்கோணமலை வாழ் வரியிறுப்பாளர்கள் அனைவரும் இம்மாதம் 29-ந்திகதி திருகோணமலை அர்ச்சுசையப்பர் கல்லூரியில் கூடி ஒரு புதிய செயற்றிறன் கொண்ட வரியிறுப்பாளர் சங்கத்தினை அங்குராார்ப்பணம் செய்யவிருக்கிறார்கள். இக்கூட்டத்தில் பொதுக்களிடம் எதுவித முன்னறிவித்தலுமின்றி அறவிடப்படும் வரி சம்பந்தமாகவும், அளவுக்குமேலான வரித்தீர்வை விஷயமாகவும், சில முக்கிய பிரச்னைகள் ஆராயப்படவிருக்கின்றன.

அடிக்கலில் ஆங்கிலம்

அண்மையில் இலங்கைப் பிரதமர் திரு. டட்லிசேன நாயகாவினால் அடிக்கல் நாட்டப்பட்ட திருக்கோணமலை நகராண்மைக் கழகப் புதிய வாசிகசாலை அடிக்கல்லின் மேலுள்ள எழுத்துக்கள் தனி ஆங்கிலத்திலேயே பொறிக்கப் பட்டுள்ளன. தமிழில் அனைத்தையும் செய்ய வேண்டும் என வலியுறுத்தும் திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தால் அமைக்கப்படவிருக்கும் இப்படிப்பக அடிக்கல்லில் ஆங்கில எழுத்துக்கள் இருப்பது இங்குள்ள மக்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது.

தடையும..,

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யர் என்ற பல சாதிகள் சொல்லப்படவில்லை. இவர்களைப்பற்றி ஆலயத்துள் பிரவேசிக்கப்படாதென்ற திடமான விதியில்லை. மேலும் ஆலயங்களில் சாதித்தடை சமூக ஒற்றுமையைக் குலைக்குந்துரோகமாகும். இன்னும் இச்சாதித்தடை அடிப்படை மனித உரிமைப் பிரகடனத்திலுள்ள உரிமைகளான சமத்துவம், வழிபாட்டுச் சுதந்திரம் ஆகிய இரண்டிற்கும் மாறு. இன்று இச்சாதித் தடை சட்டத்திலும்தண்டிக்கப்படக்கூடிய குற்றமாக இருக்கிறது. மேற்சொல்லப்பட்ட பல காரணங்களுக்காக ஆலய வழிபாட்டில் சாதித் தடை வேண்டாமென்று வற்புறுத்துகிறேன்.

சாதித்தடைக்கு சாஸ்திரங்கள் ஆதாரமென்று கூறுவார்க்கு அப்பர் சுவாமிகளுடைய மறுமொழியை நினைவுறுத்துகிறேன்

'சாத்திரங்கள் பலபேசும்
சழக்கர்காள்
கோத்திரமும் குலமும்
கொண்டென் செய்வீர்'

உரிமைகளைக் கேட்குமுன் கொடுப்பதுதான் உத்தமம். கேட்டபின் கொடுப்பது மத்திமம். கேட்டபின் கொடாதிருப்பது அதமம்.

வழிபாடு ஓர் ஆத்மீக இயக்கம். அதனை உரிமை இயக்கமாக மாற்றுவது ஒருபடி இறங்குவதாகும். வழிபாட்டிற்காக பலவந்தம் செய்வது அதர்மமாகும். வழிபாட்டைப் பொறுத்த மட்டில். ஆலயப் பிரவேசம் மறுக்கப்பட்டவர்கள் மிக்க அமைதியாக ஆத்மீகப் பண்போடு இயங்கவேண்டும். சிந்தனையில், செயலால், செயலில் பலாத்காரத்தை அறவே தவிர்க்கவேண்டும். கலவர நிலைகளை உருவாக்க விரும்பும் கடவுள்நம்பிக்கை இல்லாத, சமயத்தை அபின் மயக்கமென்று கூறுகின்றவர்களுடைய சொல்லைக் கேட்டு இயங்குவது மிக்க ஆபத்தானது. அதனால் உரிமைகள் நிலைபெறுமல் கலவரமே உருவாகும். ஆகவே அன்பு வழியில்ஊர்மக்கள், கோயில் பரிபாலப் பெரியார் ஆகியோருடைய ஒத்தாசையுடன் சம்மதம்பெற்று ஆலய வழிபாடுசெய்வதே நல்லவழி. எனவே ஆலய வழிபாட்டில் தடையும் வேண்டாம், பலவந்தமும் வேண்டாம் என்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

முதல் இடம

யாழ்ப்பாணம், வியாவரவெட்டி விக்னேஸ்வரவித்தியாலயத்தில் நடைபெற்ற ஐக்கிய தினப்போட்டியில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை மாணவிகளால் அளிக்கப்பட்ட முருகன் காட்சியும் கிராமிய நடனமும் முதலிடம் பெற்றன.

நாட்டிலும் நகரிலும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

துங், ஜோன்ஸன், கோஸிஜின், ஹோ-சி-மின், நாஸர், டயன் இவர்கள் எல்லோரையும் பிடித்து சாந்த மருந்தில் ஒரு 'டோஸ்' கொடுத்து விட்டால் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து இளித்துக் கொண்டு உலகம் எல்லாம் 'சமரஸம் நிலவும் இடமே' என்று பாடத் தொடங்கி விடுவார்களன்றோ!

பூனைக்கு மணி கட்டுவது எப்படி, என்பதுதான் பிரச்சினை.

—வழிப்போக்கன்

மூதூர்க்கடிதம்

பாடசாலைத் தரம்பிரித்தல்: தமிழ் மாணவர் பாதிக்கப்படலாம்

— நமது நிருபர் [ஒ. தர்மராசா —

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அமுல் நடத்தப்படவிருக்கும் பாடசாலை தரம் பிரித்தலினால் மூதூர் பகுதியில் உள்ள அநேக பாடசாலைகள் வெகுவாகப் பாதிக்கப்படத்தக்க சூழ் நிலைகள் உருவாகியுள்ளன. மூதூர் பகுதியில் கடந்த வருடங்களில் க. பொ. த. பரீட்சைக்கு மாணவர்களை அனுப்பி வந்த சேனையூர், மல்லிகைதீவு, கிரிவெட்டி மற்றும் மூதூர் பட்டின புனித அந்தோனியார் பாடசாலை ஆகியவைகள் இதன் கீழ் தமது தரத்தைக் குறைத்துக் கொண்டு கனிஷ்ட வகுப்போடு நிற்க வேண்டியதான நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட இப்பாடசாலைகள் நான்கும் தமிழ் மாணவர்கள் பெருந்தொகையினராகவிருக்கும் பாடசாலைகளாக விளங்குவதால் தமிழ் பெற்றோர்கள் இதையிட்டுக் கலக்கமடைந்துள்ளார்கள். இவ்வித தரம் பிரித்தல் அமுல் நடத்தப்படும் பட்சத்தில் தமது பிள்ளைகள் பிற இடங்களுக்குச் சென்று சிரேஷ்ட பாடசாலைகளில் சேரமுடியாத நிலையில் தமது கல்வியை இழந்து மீண்டும் கிராமப்புற மக்கள் கல்வித் தரம் அற்றவர்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவார்கள் என்றும், இத்தகைய கல்வித்திட்டம் கிராமவாசிகளுக்கே ஓர் 'அடி' என்றும் தேசிய அரசினர் இத்தகையதோர் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பது வருத்தத்திற்குரியதென்றும் இப்பாடசாலைப் பெற்றோர்கள் பேசிக்கொள்கிறார்கள் பலர் இதுவிடயமாக உயர் அதிகாரிகளுக்கு ஆட்சேப மகஜர்களும் அனுப்பி வைத்துள்ளதாக கிராமமுன்னேற்றச்சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். பிரஸ்தாப நான்கு தமிழ் பாடசாலைகளில் பட்டினப்பகுதியில் உள்ள புனித அந்தோனியார் பாடசாலையும், மூதூரில் தென் பகுதியில் பல கிராமங்களுக்கும் மத்தியில் வேகமாக முன்னேறிவரும் கிரிவெட்டி அரசினர் பாடசாலையும் மகாவித்தியாலயங்களாக தரம் உயர்த்தப்படவேண்டும் என்று அண்மைக் காலத்தில் தொடர்ந்து மகஜர் அனுமபியுள்ளதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. தற்சமயம் தமிழ் மகாவித்தியாலயம் என்று கூறிக் கொள்ளுமளவிற்கு இங்குள்ளது. சம்பூர் மகாவித்தியாலயம் ஒன்றே. பெயரளவில் அந்தஸ்தில் உள்ள இப்பாடசாலையில் விசேஷ பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியர்களோ, அன்றி சங்கீதம், வர்த்தகம் முதலியவைகளைப் பயிற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களோ இதுவரையிலும் நியமிக்கப் பட்டதில்லை. அந்தஸ்தில் உள்ள ஒரே மகாவித்தியாலயத்தின் கதியும் இவ்வாறிருக்கையில் தரமான பாடசாலைகளும் தரம் குறைக்கப் பட்டால் நிலைமை பரிதாபத்திற் குரியதாகவேயிருக்கும். பாடசாலைத் தரம் வகுத்தல் சம்பந்தமாக வட்டார வித்தியாதரிசியினால் தலைமை ஆசிரியர்கள் கூட்டம் கூட்டப்பட்டு பலவிடயங்களும் ஆலோசிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

கல்வி அதிகாரியாக நியமனம்

மூதூரைச் சேர்ந்தவரும், மண்ணிலும், இன்னியாவிலும் மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய மான திரு. ஏ. வி. முகமது அண்மையில் மூதூர் வட்டார கல்விஅதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

திரு. ஏ. வி. முகமது ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராவார்.

சித்தஆயுர்வேத ...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

நோயாளிக்கு வைத்தியசாலையில் நடைபெற்ற சிகிச்சைகளை எழுதிக்கொடுத்தனுப்பிஎனல் ஆஸ்பத்திரியில் அவை ஏற்கப்படுவதில்லை. ஏன்? ஆயுர்வேத சிகிச்சா முறை ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஆங்கில வைத்தியருக்குத் தெரியவராது. இந்நிலை கைதடியில் இன்று கால்கோளிடப்படும் ஆயுர்வேதவைத்தியசாலை பூர்த்தியானதும் நீங்கிவிடும்.

சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் விசேட இடம் பெற்றிருக்கும் இரசதாதுக்கள், லோகங்கள், இவற்றைக் கொண்டு தயாரிக்கப் பெறும் விசேட அவுடதங்களாகிய பஸ்பம், செந்தூரம் பதங்கள் ஆகியவற்றின் சிறப்புக்களை ஆராய்ச்சி உலகுக்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பும் அமைகிறது.

சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளினதும் ஒத்துழைப்பு, ஊக்கம், தேசியப்பற்று ஆகியவற்றால் ஒரு சிறந்த சித்த ஆயுர்வேத ஆஸ்பத்திரியை அண்மையில் காண ஆவலுடன் இருக்கின்றோம்.

காரியப்பர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுமென இலங்கை சுப்ரீம் கோர்ட்டில் கேட் முதலியார் காரியப்பர் மனுத்தாக்கல் செய்தார். இம் மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடிசெய்து தீர்ப்பளித்தது. இதை ஆட்சேபித்து பிரிவிகவுன்சிலுக்கு காரியப்பர் ஒரு மனுதாக்கல் செய்திருந்தார். இந்தமனுவை முதல்தடவையாக விசாரணை செய்த பிரிவிகவுன்சின் காமன்வெல்த் நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்திருக்கிறது.

இத்தீர்ப்பின்படி கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர் ஏழுவடங்களுக்குப் பொதுத்தேர்தலில் ஈடுபடமுடியாது.

மட்டக்களப்பு புதிய அதிபர்

மட்டக்களப்பு, புதன் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திரு. ஆர்தர் இரத்தினவேல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

விசேஷ பயிற்சி

யாழ். கிரிக்கெட் வீரர்களுக்கு

யாழ்ப்பாணம், வியாழன் அகில இலங்கை தேசிய கிரிக்கெட் பயிற்சியாளர் திரு. டடி அவுட்ஸ்ரோன் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவர் யாழ்ப்பாணத்தின் பல பாடசாலைகளுக்கும், சன சமூக நிலையங்களுக்கும் சென்று கிரிக்கெட் வீரர்களுக்கும் பயிற்சி அளிப்பதில் ஈடுபட்டுள்ளார்.

பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக்கல் லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, அரியாலை சனசமூகநிலையம் ஆகியவற்றைச்சேர்ந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு இவர் மூலம் பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்க உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு என். தேவபாலன் மேற்கொண்டுள்ளார்.

கயரோக நிவாரண பரிசளிப்பு 28ல்

சுழிபுரம், புதன் வலிகாமம் மேற்கு கயரோக நிவாரண தேசிய சங்கத்தினரின் பரிசளிப்பு விழா இம்மாதம் 28-ம்திகதிவெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறுகிறது. இவ்விழாவையொட்டி வடலியடைப்பில் இருந்து அன்று பிற்பகல் கயரோகப்பவனி நடைபெறவிருக்கிறது. பவனியில் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் டிராக்டர் மாட்டு வண்டிகள் கலந்து கொள்ள விருக்கின்றன.

மூவர் திருமபினர்

சுன்னாகம், புதன்

ஒழுங்காக வேலைக்கு வராததால் சுன்னாகம் பட்டின சபைத்தலைவரால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட முருகன் என்ற தொழிலாளிக்கு ஆதரவாகபத்துத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அவர்களில் மூவர் வேலை நிறுத்தத்தைக்கைவிட்டு வேலைக்குத்திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5 லட்சம் நன்கொடை

பெரியார் அளிக்கிறார்

திருச்சி, ஜூலை 25

திருச்சியில் வைத்தியக் கல்லூரி அமைக்க ஈ. வே. ரா. பெரியார் ரூ. 5 லட்சம் நன்கொடை வழங்குகிறார்.

இத் தகவலைத் திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு. அன்பில் தர்மலிங்கம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது 'திருச்சியில் வைத்தியக் கல்லூரி அமைக்க ரூ. 5 லட்சம் கொடுக்கும்படியும் அதற்கு ''பெரியார் வைத்தியக் கல்லூரி'' என்று பெயர் வைத்து விடலாமென்றும் பெரியாரிடம் கேட்டோம். 'திருச்சியில் வைத்தியக் கல்லூரி அமைத்தால் நீங்கள் கேட்கும் தொகையை கொடுக்கிறேன்' என்று பெரியார் கூறினார்.

பண்டத்தரிப்பு, புதன்

ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டும், வலித்தூண்டல் சந்தானர் தினத்தைமுன்னிட்டும்மேலதிக பஸ்கள் சேவையிலீடுபடுத்த சண்டிருப்பாபஸ்நிலைய மேலதிக பஸ் பிரயாணிகள் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.தொழில் நுட்ப கல்லூரிப் பிரவேசம்

உடுவில், புதன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலைக்கழகஆண்டு1967-68க்கு அனுமதிப்பதற்கான புதிய போதனையினங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர் வரும் கழக ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் போதனையினங்களான மிகு உயர்தமிழ் கருங்கெழுத்தாளர் தகுதிப் பத்திரம்[ஒரு வருடம் மாலை] மின்சம்பி இணைத்தல் [தமிழ் ஒரு வருடம் மாலை], மற்றும் ஆங்கில மொழி மூலம் இரு வருட பகல் நேர கணக்குப் பதிவாளர், இருவருட சுருக்கெழுத்து- தட்டெழுத் தாளர், இருவருட மாலை சுருக்கெழுத்து- தட்டெழுத் தாளர், ஒரு வருட மாலை சுருக்கெழுத்தாளர் போதனையினங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போதனையினங்களுக்கு விண்ணப்பம் செய்வோரின தொகை அப் போதனையினத்து வகுப்பிலுள்ள இடங்களுக்கு உட்பட்டதாயின் பரீட்சையின்றியும், மேற்பட்டதாயின் பரீட்சை மூலமும் தெரிந்தெடுக்கப்படுவார்களெனத் தெரிகிறது.

கி.ச.அலுவலக திறப்பு விழா

நயினாதீவு, புதன்

நயினாதீவுகிராமசபையால் ரூ.2000 செலவில் கட்டப்பட்ட கிராமசபை அலுவலகம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகரால் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் நயினாதீவு கிராமசபைத்தலைவர் திரு. சி. க. கம்பையா தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். விநாயகமூர்த்தி, திரு.க.சபா. ஆனந்தர், திரு.செ. விசாகப்பெருமாள் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

கிறிஸ்குத்து மூவர் தேடப்படுகின்றனர்

காங்கேசன்துறை, புதன்

மயிலிட்டியைச் சேர்ந்த கைலயங்கிரி என்பவருக்கு கிறிசால் குத்திப்படுகாயம் விளைவித்ததாக அதே ஊரைச்சேர்ந்த வடிவேலு சண்முகானந்தம், வி. தேவானந்தம் வி. சிவானந்தம் ஆகியோர் மீது குற்றம் சாட்டி காங்கேசன்துறைப்பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்குத்துக்கிலக்கானகைலயங்கிரிஎன்பவர் முதலில் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கிறிஸ்குத்து சம்பவம் நேற்று நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களான மூவரும் பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர். இது சம்பந்தமாக காங்கேசன்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு.எஸ். வி.மூர்த்தி புலன் விசாரணை நடத்தி வருகிறார்.

டெலிபோன் கம்பிகள் திருட்டு

சங்கானை, புதன்

வட்டுக்கோட்டை தபாற்கந்தோருக்கு அருகாமையால் பொன்னாலை செல்லும் வீதியில் சமீபத்தில் பெருந்தொகையான டெலிபோன் கம்பிகள் களவாடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட டெலிபோன் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சந்திரசேகரம், சங்கானைப் பொலிசிற்கு தகவல் கொடுத்ததன் பிரகாரம் பொலிசார் நடாத்திய விசாரணையிலிருந்து 400 பெறுமதியான 2000 யார் கம்பிகள் களவாடப்பட்டுள்ளதெனத் தெரியவந்துள்ளது.

இவ்வித விஷமத்தனம் செய்யும் விஷமிகளைக் கைது செய்வதில் பொலிசார் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

வெட்கம விலக வழி

கி.ச.தலைவர் அறிவுரை

உடுவில், புதன்

"படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடவிடாது தடுப்பது அவர்கள் பின்பற்றும் மேலை நாட்டு நாகரீகமே. படித்தவர்கள் என சொல்லிக்கொள்ளளும் இன்றைய இளைஞர்கள் ஒருசிறிய அளவு அறிவைப் பெற்றதும் தமிழ்ப்பண்பாட்டை மறந்து அந்நிய நாகரீகங்களைப் பின்பற்றுகின்றனர். அதனால் வயலில் வேலைசெய்ய அவர்கள் வெட்கப் படுகிறார்கள். தமிழ்ப் பண்பாட்டு கலாசாரமைய வேட்டியை உடுப்பார்களானால் அவர்களை முடியிருக்கும் வெட்கம் தானே விலகிவிடும், வெட்கமின்றி விவசாயம் செய்வார்கள்" என இணுவிலில் நடைபெற்ற உணவுற்பத்தி அதிகரிப்பு பிரசாரக்கூட்டம் ஒன்றுக்குத் தலைமைவகித்துப் பேசியஉடுவில். கிராமசபைத் தலைவர் திரு.ச.முத்துலிங்கம் கூறினர். திருவாளர்கள் ஏ.எஸ்.கணேசன், எம்.பத்மநாதன் ஆகியோரும் பேசினர்.

"ஒரு வாரத்தில் சீரான பஸ் சேவை கிடைக்கும்"

யாழ்ப்பாணம், புதன்

இன்னும் ஒரு வாரகாலத்தில் சீரான சேவை கிடைக்கும்என இலங்கைப்போக்குவரத்துச்சபை பிராந்திய முகாமையாளர் தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

புதிய நேரஅட்டவணையை விரைவில் அமுல் நடத்தும்படி சங்கம் வற்புறுத்தியுள்ளது.

15நிமிடங்களுக்கு ஒரு தடவை சேவை செய்ய வேண்டிய பஸ் சில நாட்களில் இரண்டு மணித்தியாலத்திற்கு ஒருதடவை கூட சேவை செய்வதில்லையென்றும் இதனால் பிரயாணிகள் பெரும் கஷ்டப்படுவதாகவும் சங்கச்செயலாளர் தெரிவித்தார்.

வடபகுதியிலுள்ள மற்றும் பஸ் பிரயாணிகள் சங்கங்களும், பஸ்சேவைசீர்கேடு பற்றி பிராந்திய முகாமையாளருக்குப் புகார் செய்துள்ளனவென்று தெரியவருகிறது. [அ.நி]

விபத்து தடுக்கப்பட்டது

புன்னாலைக்கட்டுவன், புதன்

பலாலி நோக்கிச் சென்று கொண்டிருந்த சோடா வான் ஒன்று ஊரெழுவிநாயகர் கோவிலுக்கு அண்மையில் பெற்ரோல் அடைப்புக் காரணமாக ஏற்பட்ட கோளாறினால் தீப்பற்றியது. எனினும் அவ்விடத்தில் நின்ற வாலிபர்களின் பெரு முயற்சியால் தீஉடனடியாக அணைக்கப்பட்டது. சாரதியும் வேறுசிலரும் உயிர்த்தப்பினர்.

கூட்டுறவே விமோசனம் தரும்

சுன்னாகம், புதன்

"கூட்டுறவு முறையேஇன்றைய எம் பொருளாதாரப் பிரச்னைகள் தீர உகந்ததாகும். எமது சமூகத்தினதும் எம் நாட்டினதும் சுபீட்சம் கூட்டுறவிலேயே தங்கியுள்ளது."

இவ்வாறு வலி. வடக்கு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகளும், ஐக்கிய பண்டகசாலைப் பிரதிநிதிகளும், சுன்னாகம் வலி-வடக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கசமாச மண்டபத்தில் கூட்டிய கூட்டத்தில் பேசிய வடபகுதி கூட்டுறவு மேற்பார்வைச் சபைத தலைவர் திரு. ஆர். இராசரத்தினம் கூறினர்.

பண்டிதர் க.நாகலிங்கம் தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில திரு. இராசரத்தினம் தொடர்ந்து பேசுகையில் "விவசாயிகளுக்கு வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ள கடன் நிதியை ஐக்கிய நாணய சங்கங்கள் விவசாயிகளின் கைகளில் விரைவாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றார்.

'கடுமை நடவடிக்கை வேண்டும்'

சங்கானை, புதன்

'மந்திரிசபை பந்தயம்கட்டுவதையும். குதிரைப்பந்தயத்தையும் சட்டரீதியாக்குவதற்கு சாதகமான அபிப்பிராயம் கொண்டுள்ளதாக பத்திரிகைச் செய்திகள்கூறுகின்றன. குதிரைப்பந்தயம் தடைசெய்யப்பட்ட காலமிருந்துஇன்றுவரைமக்கள் பந்தயம்கட்டுவதைக்கைவிட்டு விட்டார்களென்று சொல்ல முடியாது. அரசாங்கம் இச் சட்டவிரோத பந்தயங்களையும், பந்தயம் கட்டுவதையும் தடைசெய்ய கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுத்த போதிலும் இந் நடவடிக்கை தோல்வியே அடைந்துள்ளன என்பது கண்கூடு. இவைகளையும் தடுத்து நிறுத்த ஏன் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கக்கூடாது.'

இவ்வாறு சங்கானைப் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் உள்நாட்டமைச்சர் டாக்டர் விஜயானந்த தஹநாயகாவிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஜெர்மனி செல்கிறார்

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜச் செயலாளர் திரு. என்.கந்தசாமி உபகாரச் சம்பளம் பெற்று கல்வி பயில ஜெர்மனிக்குச் செல்கிறார். கூட்டுறவு இலாகாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் உபகார சம்பளக் கல்வியை ஓர் ஆண்டு ஜெர்மனியில் தங்கியிருந்து கற்பார்.

நற்கருணைத் திருநாள்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலையில்நற்கருணைத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட கிராமத்து வீதிகளூடாக நற்கருணை நாதர் பவனி வந்தார்.

பூரண இன்பம்!

திருப்தி!

திருப்தி தரும் பூரணமான இன்பம்; பக்குவம் முதிர்ந்த வேர்ஜினியா புகையிலை ரகங்களின் செறிந்த சுவை - திறீ ரோஸஸ் தரும் உத்தரவாதம் இவையே.

இலங்கையின் அபிமானத்தை

திறீரோஸஸ்

பெற்றது இதனால் தான்

இலங்கையில் தயாரிப்போர்:
சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிடெட்.

எஸ்.டி.ஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

போட்டி விதிகளுக்கு மாறாக மட்டக்களப்பு நடந்துள்ளதாம்

மட்டக்களப்பு வெற்றியை யாழ்ப்பாணம் ஆட்சேபிக்கிறது

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை தேசிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட யாழ்ப்பாணத் தெரிவுக்கோஷ்டிக்கும் மட்டக்களப்பு தெரிவுக்கோஷ்டிக்கும் இடையே மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மட்டக்களப்பு 7—2 கோல்களால் யாழ்ப்பாணத்தை வெற்றியீட்டியது. ஆனால் இந்தப் போட்டி சரியான முறையில் நடத்தப்படவில்லை என்றும், போட்டி விதிகளுக்கு மாறான வகையில் மட்டக்களப்பு நடந்து கொண்டுள்ளதென்றும் காரணம் காட்டி யாழ்ப்பாணம் ஆட்சேபித்து அறிக்கை விடுத்துள்ளது.

இந்த அறிக்கையை யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் சார்பில் சங்கக் காரியதரிசி திரு மகேந்திர ராசா அனுப்பியுள்ளார்.

இப்போட்டிக்கு மட்டக்களப்பு உதைபந்தாட்டச் சங்கத்தின் முக்கிய உறுப்பினர் திரு. இ. வேதநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

போட்டி விபரம

இரு கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதல் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் ரசிப்பாகவே நடைபெற்றது. மைதானத்தில் திரண்டிருந்த உதைபந்தாட்ட ரசிகர்கள் கரகோஷம் செய்து இரு சாராரையும் உற்சாகமூட்டிக் கொண்டிருந்தனர். முதன் முதலில்மட்டக்களப்பே ஒரு கோலைப் போட்டது. தொடர்ந்து யாழ்ப்பாணமும் ஒன்றைப் போட்டது. இடைவேளையின்போது மட்டக்களப்பு 3 கோல்களும், யாழ்ப்பாணம் ஒரு கோலும் பெற்றிருந்தன. இடைவேளைக்குப் பின்னர் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. மட்டக்களப்பு அடுக்கடுக்காக கோல்களை விளாசிக் கொண்டே போனது. எனினும் யாழ்ப்பாண வீரர்கள் இயன்றவரை மட்டக்களப்பு வீரர்களைப் படாத பாடு படுத்தினர்.

மட்டக்களப்புக் கோஷ்டியில் ஜோன் பிள்ளை பாத்லோ ஆகியோரின் ஆட்டம் அருமையாயிருந்தது அதிகமான கோல்களையும் இவர்களே போட்டனர் யாழ்ப்பாணக் கோஷ்டியில் அப்பையா, இராசதுரை, மரியநாயகம் ஆகியோரது ஆட்டம் ரசிகர்களின பாராட்டைப் பெற்றது. இடதுகரைவீரர் தேவராசா முகத்தில் பலத்த காயமேற்பட்டபோதும் இரத்தம் சொட்டச் சொட்ட மிக அருமையாக ஆடினார்.

இப்போட்டி முடிவில் மட்டக்களப்பு 7—2 கோல்களால் யாழ்ப்பாணத்தை வென்றது.

கரிகாலன் சாமபியன்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு 'கலைக் குவியல்' நாடக மன்றத்தின் ஆதரவில்நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டியில் 'கட்டப் பொம்மன்' கோஷ்டியை 'கரிகாலன் கோஷ்டி 3-2 கோல்களால் தோற்கடித்து சாம்பியனானது.

இப் போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் ரசிப்பாகவே, காணப்பட்டது. இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் 'கட்டப் பொம்மன்' கோஷ்டியைச் சேர்ந்த கே. அரசரத்தினம் முதலாவது கோலை விளாசினார். இதைத் தொடர்ந்து எதிர்க் கோஷ்டியின் காப்டன் கே கமலலிங்கமும் ஒரு கோலை சி. நகுலநாதன் உதவியுடன் போட்டார். இடைவேளையின் போது இருசாராரும் ஒவ்வொரு கோல் பெற்றிருந்தனர். 'கட்டப்பொம்மன்' கோஷ்டியின் காப்டன் சு. ரத்தினசிங்கம், கே. ருத்திரலிங்கத்தின் உதவியுடன் கே. இதயலிங்கம் ஒரு கோலை வெளுத்து வாங்கினார். எதிர்க் கோஷ்டியில் வி. முத்துக்குமாரசாமியின் உதவியுடன் விஜயதாசன் மேலும் ஒரு கோலை விளாசினார். 'கட்டப் பொம்மன்' கோஷ்டியில் கே. அரசரத்தினம். கே இதயலிங்கம் ஆகியோரின் ஆட்டம் அருமையானது. எதிர்க் கோஷ்டியில் கே. கமலலிங்கம், ச. துரைரத்தினம் ஆகியோரின் ஆட்டம் பாராட்டுக்குரியது இப் போட்டிக்கு திரு. சு. பஞ்சரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

மேற்படி மன்ற மைதானத்தில நடைபெற்ற பரிசளிப்பு விழா திருமதி கேகயலிங்கம் தலைமையில் நடைபெற்றது சாம்பியன் கோஷ்டிக்கு செல்வி வேலவிழி கேகயலிங்கம் வெள்ளிக் கிண்ணம் பரிசளித்தார்.

நாடற்றவர்க்கு கடன் இல்லை

வவனியா, புதன்

வவனியா கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டத்தில் நாடற்றவர்களின் விவசாயக் கடன் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் அவர்களது மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும், கிளிநொச்சி, வவனியா, மன்னார் முதலிய இடங்களில் நாடற்றவர்களே பெருமளவில் உணவு, உப உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்களென்றும், இது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் சிலர் திரு. கோ. நடேசபிள்ளை தலைமையில் வவனியா அரசாங்க அதிபரைச் சந்தித்துப் பேசியும் எவ்வித பயனுமில்லையென்றும் இ தொ. க வவனியா மாவட்டத் தலைவர் தெரிவிக்கிறார்.

நவீன ரயில் நிலையம்

திருக்கோணமலை, புதன்

யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டி, போன்ற இடங்களில் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள அழகியபுகையிரத நிலையங்கள் போன்று திருகோணமலையிலும் பிரயாணிகள் தங்கிச்செல்லக் கூடிய மாடி அறைகளைக் கொண்ட நவீனரயில் நிலைய அமைப்பு வேலைகளில் ஒரு பகுதி முற்றுப்பெற்று விட்டது. இந்தப்புகைவண்டி நிலையவமைப்பு வேலைகளில் ஒரு பகுதி முற்றுப் பெற்றுவிட்டது. இந்தப்புகைவண்டி நிலையம் ஈழத்தின் சிறந்த புகையிரத நிலையங்களில் ஒன்றாக விளங்கும் என நம்பப்படுகிறது.

நவாலிமகா வித்யாலய விளையாட்டுப் போட்டி

நவீன அம்சங்கள் பற்றி பிரதம வித்தியாதிகாரி பாராட்டு

நவாலி, செவ்வாய்

நவாலி மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது பல நவீன அம்சங்களும் சேர்க்கப்பட்டதுகுறித்து பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பிரதம வித்தியாதிகாரி திரு. சி. ஏ. ஞானசேகரம் தமது பாராட்டைத் தெரிவித்தார்.

வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் உடுவில் எம். பி திரு. வி தர்மலிங்கம் போஷகராகக் கலந்துகொண்டார்.

கல்லூரி அதிபர் திருமதி ஏ. டபிள்யு. தங்கராசாவின் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் இராசநாயகமுதலியார் இல்லம் அதிகப்படியான புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றது. சோமசுந்தரப் புலவர் இல்லம் இரண்டாம் இடத்தையும், தம்பையா பண்டிதர் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பரிசளிப்பு வைபவத்தின் போது உரைநிகழ்த்திய அதிபர் திருமதி தங்கராசா பேசுகையில் கூறியதாவது

''ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அடிப்படையான அம்சம் பெற்றோரின் ஊக்கம் தான். அவர்களது ஒத்துழைப்பினால்தான் கல்வி வளர்ச்சி பெறுகிறது. பிள்ளைகளுக்கு நற்பழக்கத்தைப் போதிப்பதில் பெற்றோர் தமது பங்கைச் செலுத்த வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் மூலம் மாணவர்கள் மத்தியில கட்டுப்பாட்டு உணர்வை ஏற்படுத்தலாம்''

கல்லூரியின் இடவசதிக் குறைவு போன்றவற்றை எடுத்துக்கூறிய அதிபர், அவற்றை நிவர்த்தி செய்ய எல்லோரும் உதவவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

உடுவில் எம்.பி. திரு. வி தர்மலிங்கம் பேசுகையில் கல்லூரியின் இடவசதிக் குறையை நீக்கத் தாம் கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி ஆவன செய்வதாக உறுதி தெரிவித்தார் திருமதி தங்கராசாவின் தலைமையில் கல்லூரி பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதாக அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி ஞானசேகரம் பரிசில்களை வழங்கினார்.

''பாடசாலை நூல் நிலையங்களே அவற்றின் வளர்ச்சிக்குத்துணை''

யாழ்ப்பாணம், புதன்

''பாடசாலைகளிலுள்ள நூல்நிலையங்களே அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு முக்கியமானதாகவிருக்கின்றன. பாடசாலை நூல்நிலையங்களின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றுபவர்கள் அங்கு பல நூல்களையும் கற்று, போதிய அறிவைப் பெறுவதால், அவர்கள் வளரும் குழந்தைகளுக்குப்போதிய கல்வி கற்பிக்கக்கூடியவர்களாகவிருக்கிறார்கள்''

மேற்கண்டவாறு வட பகுதி பாடசாலை நூல்நிலைய மேற்பார்வையாளர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் வட பகுதிவித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் தெரிவித்தார். இக்கருத்தரங்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு பிரித்தானிய கவுன்ஸிலின் பிரதம நூல்நிலைய மேற்பார்வையாளர் திரு றஸ்ஸல் பௌடன் விசேஷமாகக் கலந்துகொண்டார். பாடசாலைகளிலுள்ள நூல்நிலையங்களைத் திருத்தியமைப்பது பற்றியும், அந்நூல்நிலையங்களில் மாணவர்களை உபயோகிக்கவேண்டுமென வற்புறுத்துவதுபற்றியும் திரு. றஸ்ஸல் பௌடன் தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்.

பாடசாலைகளிலுள்ள நூல்நிலையங்களின் தேவைகள், விஸ்தரிப்பு, நிர்வாகம் ஆகியனபற்றியும், நூல்நிலைய நூல்களின் அமைப்பு, பிரிவுகள், அட்டவணைகள், நூல்களைத் தேர்ந்தெடுக்கும் முறை ஆகியனபற்றியும் இக்கருத்தரங்கில் ஆராயப்பட்டது. கூட்டமுடிவில் திருமதி ஆர். ஆர். நவரத்தினம் இச்சங்கத்தின்போஷகராகவும், திரு. றஸ்ஸல் பௌடன் கூட்டு போஷகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

[ந. நி.]

''வவனிக்குளத் திட்டத்தில்

அத்துமீறிக் குடியேறுவோர் வெளியேற்றப்படுவர்''

மல்லாவி, புதன்

வவனிக்குளக் குடியேற்றத்திட்டத்திலுள்ள முடிக்குரிய மற்றும் தனிப்பட்டவர்களின் காணிகளில் அத்துமீறி, அரசாங்கத்தின் உத்தரவின்றிக் குடியேறி வசித்து வரும் குடியேற்றவாசிகளுக்கு அவரவர் திருத்திப் பண்படுத்திவரும் காணிகளைப் பங்கீடுசெய்ய முடியாது எனவும், அரசாங்கம் ஒருவரை அத்துமீறிய குடியேற்ற வாசியெனக்கருதும் வரை அவருக்கு வேறு காணித்துண்டுதானும் பங்கீடு செய்யமுடியாதெனவும், அத்துமீறிக்குடியேறிய காணிகளை விட்டு வெளியேறியவர்களுக்கத் தகுதியான காணிப்பங்கீடு செய்யப்படும் என்றும், வெளியேற மறுப்பவர்களைச் சட்டப்படி பொலிஸ் உதவியுடன் காணிகளிலிருந்து வெளியேற்றப்படும் எனவும், இதுவே யாழ் மாவட்டக் காணி அதிகாரியின் தீர்ப்பெனவும் யாழ். மாவட்டக்காணி அலுவலக பிரதமலிகிதரான திரு. மா. இராசரத்தினம், யோகபுரம் வவனிக்குளம் 1-ம் பகுதிக் குடியேற்ற அதிபரின் அலுவலகத்தில் அத்துமீறிக் குடியேறியவர்களிடம் கூறினார். துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து, வவனிக்குளம் 1-ம் பகுதி குடியேற்ற மேற்பார்வையாளர் திரு மு. மாசிலாமணி ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

கூட்டுத்தாபனங்கள்

புதுடில்லி, ஜூலை 26

பீஹார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான் ஆகிய ஐந்து ராஜ்யங்களிலும் விவசாய கடன் திட்டக் கூட்டுத் தாபனங்களை நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கற்பூரம்

இன்றே கேட்டு வாங்குங்கள்

யானை மார்க் கற்பூரம்

இலங்கையிலேயே தயாரிக்கப்பட்டு முதன்முறையாக இலங்கையிலேயே டின்களில் அடைக்கப்படும் உன்னதமான கற்பூரவில்லைகள். இறக்குமதியாகும் மற்றெந்தக் கற்பூரவில்லைகளுக்கோ, டின்களுக்கோ எந்த வகையிலும் சளைக்காத உயரியதரச் சிறப்புடையவை.

ஒவ்வொரு 3|4 இறாத்தல் டின்னிலும் 960 வில்லைகள்.

இதுதவிர ¼றாத்தல்-½றாத்தல்பக்கட்டுகளும் உண்டு.

குறைந்த விலையில் எங்கும் கிடைக்கும்.

கற்பூரம் வாங்கும போது

யானை மார்க் கற்பூரம்

என்று கேட்டு வாங்குங்கள்.

யாழ்ப்பாணத்தில் விநியோகஸ்தர்கள்;-

A. வைத்திலிங்கம்

அன் கோ.,

45, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:

ஊவா கற்பூரத் தொழிற்சாலை

கொழும்பு-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி, சீனி, மாவு, பால் உணவு விலைகளில் மாற்றமில்லை

சிகரட் விலை ஒரு சதம் உயர்வு; இறக்குமதிப்பொருள் விலை ஏறும்

அரசாங்கஊழியரின் அலவன்ஸ் அதிகரிப்பு

கொழும்பு, செவ்வாய்

சிகரட்விலை ஒருசதமாக உயர்ந்துவிட்டது. நிதிஅமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா இன்று பிற்பகல் தமது வரவு—செலவுத்திட்ட யோசனைகளை வெளியிட்ட சிறிது நேரத்துக்குள் சகல ரக சிகரட்டுகளின் விலை களும் ஒரு சதம் உயர்ந்தது. நெவிகட்சிகரட்மட்டும் விலை உயராமல் பதினைந்து சதமாக இருந்தது. பிரிண்டல் 13 சதமாகவும், திரீரோஸ் 11 சதமாக வும் விற்பனைசெய்யப்பட்டது.

அரசாங்க ஊழியர் படி உயர்வு

சிகரட், வெளிநாட்டு மதுபானங்கள் ஆகியவைகளின் விலைகள் அதிகரிக்கின்றன. அரசாங்க ஊழியர், உள்ளூராட்சிச்சேவை ஊழியர் ஆகியோரில் நூறு ரூபாய்க்கும் குறைவான அடிப்படைச் சம்பளம் பெறுவோருக்கு 20 ரூபாய் மேலதிக அலவன்சும் நூறு ரூபாயிலிருந்து முந்நூறு ரூபாய் அடிப் படைச் சம்பளம் பெறுவோருக்கு 10 ரூபாய் மேலதிக அலவன்சும் ஒக்டோபர் மாதத்திலிருந்து கிடைக்கும். அரசாங்க பென்ஷனியர்கள், விதவைகள் உள்ளூராட்சிச் சேவை பென்ஷனியர்கள் ஆகியோருக்கும் இந்த அலவன்சில் பாதி அதாவது நூறு ரூபாய்க்குள் பென்ஷன் பெறுவோருக்கு பத்து ரூபாய் படியும் நூறு ரூபாய்க்கும் முன்நூறு ரூபாய்க்கும் இடைப் பட்ட தொகையை பெறுவோருக்கு ஐந்து ரூபாய் உயர்வும் கிடைக்கும்,

அரிசி, சீனி, பால்உணவு, மருந்து விலைஉயராதபொருள்கள்

அரிசி, சீனி, மாவு, குழந் தைகள் பால் உணவு, பால் உணவு, மருந்துகள்வைத்திய உபகரணங்கள், பத்திரிகைக் காகிதம், மண்ணெண்ணெய் உரப்பசளை, மண்வெட்டி கள், அலவாங்கு, துணிகள், பருத்திநூல் ஆகிய பொருள் களின் விலை உயரமாட்டா.

பெட்ரோல், டீசல் எண் ணெய் முதலிய பெட்ரோலி யப் பொருட்களின் இறக்கு மதிக் கட்டணம் அதிகரிக் கப்பட்ட போதிலும் அந் தக் கட்டண உயர்வுச் செலவை பெட்ரோலியம் கூட்டுத்தாபனமே ஏற்றுக் கொள்ளுமாதலால் பெட் ரோலியப் பொருள்களின் விலை அதிகரிக்கமாட்டா.

5400 பேருக்கு புதிதாக அரசாங்கத்தில் வேலை கிடைக்கும்

நிதிமந்திரி அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க சேவைக்கு புதிதாக 5400 பேர் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

கல்வி, விவசாயம், தபால் தந்தித் தொடர்பு, சுங்க இலாகா, வருமான வரி இலாகா, கணக்குப் பரிசோ தனை [ஒடிட்டர் ஜெனரல்] இலாகா ஆகியவைகளுக்கே புதிதாக ஆட்கள் எடுக்கப் படுவர். இதற்காக ஒன்ற ரைக்கோடி ரூபாய் ஒதுக் கப்படும்.

இத்தகவலை நிதி அமைச் சர் திரு. யு. பி. வன்னிநா யகா இன்று தமது வரவு-செலவுத்திட்டத்தைச் சமர் ப்பித்து உரைநிகழ்த்துகை யில் தெரிவித்தார்.

விவசாயிகள், கைத்தொ ழில்துறையினர் மற்றையோ ருக்கும் உபயோகமான முறையில் சுலபமாக இலங் கைவங்கி மூலம் கடன் வழங் குவதுபற்றி ஆராய்வதற்கு ஒரு கமிஷன் நியமிக்கப் படும் என்றும் நிதி அமைச் சர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக் கத்துக்கு உதவியும் ஒத்து ழைப்பும் அளிக்கும்படி நாட்டு மக்கள் அனைவரை யும் நிதிஅமைச்சர் கேட்டுக் கொண்டார். அரசாங்கத் தின் கொள்கையையும் திட் டங்களையும் அமுல் நடத்து வதற்கு பூரண ஆதரவையும் உதவியையும் ஒத்துழைப் பையும் தருமாறு அரசாங்க ஊழியரையும் நிதி அமைச் சர் கேட்டுக்கொண்டார்.

சட்ட விரோதமாக குதி ரைப் பந்தயங்கள் மீது சூதாட்டம் நடத்துவதைச் சட்டமாக்குவது பற்றி வதந்திகள் பல வெளிவந்த போதிலும் நிதிஅமைச்சர் அதுபற்றி எதுவும் குறிப்பிட வில்லை.

சுங்கத்தீர்வை இல்லை

முன்னர்போல் இம்முறை சுங்கத்தீர்வைஎதுவும் விதிக் கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்களத்தில் தமது வரவு-செலவுத் திட்ட உரையை நிகழ்த்த ஆரம்பித்த நிதி அமைச்சர் தொடர்ந்து ஆங் கிலத்தில்நிகழ்த்தினர். தமது வரவு-செலவுத் திட்டத்தை பொருளாதார அபிவிருத் தித்திட்டம் என அவர் வர் ணித்தார்.

துண்டுவிழும் தொகையை சரிக்கட்டுமே சனை

1967-68-ம் நிதி ஆண்டில் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானத்தை விட சுமார் நூறுகோடி ரூபாய் செல விட உத்தேசித்திருக்கிற தென்ற மதிப்பீட்டு விபரம் சென்ற ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்திருந்தது 'ஈழ நாடு' வாசகநேயர்களுக்கு நினைவிருக்கும். துண்டுவிழும் சுமார் நூறு கோடி ரூபா யையும் அரசாங்கம் எப் படிச் சரிக்கட்டப் போகிற தென்ற விபரத்தை இன்று பிற்பகல் நிதி அமைச்சர் யு. பி. வன்னி நாயகா ஜனப் பிரதிநிதிகள் சபை யில் தெரிவித்தார்.

இறக்குமதிக் கட்டண விகிதம 10 சதவீதம அதிகரிப்பு

வெளிநாட்ப் பொருள் கள் இறக்குமதி செய்வ தற்கு இதுவரை இறக்குமதி லைசென்ஸ் கட்டணமாக ஒரு சதவிகிதம் அறவிடப் பட்டு வந்தது. இனி இது பத்து சதவிகிதமாக அதி கரிக்கப்படுகிறது.

ஆனல் அரசாங்கம் இறக் குமதி செய்யும் அரிசி, சீனி, மாவு ஆகியவைகளுக்கு இந்த லைசென்ஸ் கட்டண உயர்வு இருக்காது.

இதேபோல் பால் உணவு, குழந்தைகள் பால் உணவு, பருத்திநூல் துணிவகை கள், மருந்துகள், வைத்திய உபகரணங்கள், மண் ணெண்ணெய், உரப்பசளை கள், மண்வெட்டி, அல வாங்கு பத்திரிகைக் காகி தம் ஆகியவைகளின் இறக் குமதி லைசன்ஸ் கட்டணங் களும் உயரமாட்டா.

இந்த இப் பொருள்கள் தவிர்ந்த இதர வெளிநாட் டுப் பொருள்களின் இறக்கு மதி லைசென்ஸ் கட்டண உயர்வின் மூலம் எட்டு (8) கோடி ரூபாய் வரு மானம்கிடைக்குமென்று நிதிஅமைச்சர்எதிர்பார்க் கிறார்.

புகையிலையின் மீது கலால்வரி விதிக்கப்படு கிறது. இப்பொழுது ஒரு ரூத்தல் புகையிலையின் கலால் வரியாக இதுவரை 28 ரூபாய் 50 சதமாக இருந்தது. இனி ஒரு ரூத் தல் புகையிலையின் கலால் வரி 33 ரூபாயாகிறது.

புகையிலையின் மீது கலால் வரி அதிகரிக்கப் படுவதன் மூலம் ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

உள்நாட்டில் கடன்

உள் நாட்டில் கடன் எழுப்புவதன் மூலம் 35 கோடி ரூபாய் கிடைக்கு மென எதிர்பார்க்கப்படு கிறது.

வெளிநாட்டுதவி

வெளிநாட்டு உதவி யாக பன்னிரண்டரைக் கோடி ரூபாய் கிடைக்கு மென்று நிதிஅமைச்சர் எதிர்பார்க்கிறார்.

வெளிநாடுகளிலிருந்து பொருள்களாகக் கிடைக் கும் உதவியின் மூலம் [பொருள்களை விற்பதன்] பதினைந்துகோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென நிதிஅமைச்சர் எதிர்பார்க் கிறார்.

நிர்வாகக் கடன் மூலம் இரண்டரைக்கோடி ரூபாய் கிடைக்குமெனவும் கூட்டுத் தாபனநிதிமூலம் மூன்று கோடி ரூபாயும் கிடைக்கு மென நிதிஅமைச்சர் எதிர் பார்க்கிறார். வருமானவரிப் பாக்கிகளைத் துரிதமாக அற விடுவதன்மூலம் ஒன்றரைக் கோடி ரூபாய் கிடைக்கு மெனவும் அமைச்சர் எதிர் பார்க்கிறார்.

[இச்செய்திகள் நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையின் சில பதிப்புகளில் வெளி யாகின]

பண்டாரகம உபதேர்தல்

கொழும்பு, செவ்.

பண்டாரகம உபதேர்தல் செப்டம்பர் மாதம் 23-ம் திகதி நடைபெறும்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திரு. ஜோர்ஜ்கொத்தலாவலையும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி யின் சார்பில் திரு. கே. டி. டி. பெரேராவும் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார்கள். திரு. பண் டார சுயேச்சையாக போட் டியிடுகின்றார்.

பண்டாரகம தொகுதியில் 48,800 வாக்காளர்கள் இருக்கின்றார்கள்.

கேள்வி விளம்பரம

மல்லாகம் மத்திய பல. நோ. கூ. சங்கம் புதிய கட்டி டம் நிர்மாணிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விபரங் கள் சங்க அலுவலகத்தில் போயா விடுமுறைகள் தவிர்ந்த மற்றைய நாட் களில் காலை 10 மணி முதல் நண்பகல் 1 மணி வரை காரியதரிசியிடம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத் திரங்கள் அனுப்பும் கடைசித் தேதி 10-8-67. படிவங்கள் காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம். 2

தேசிய சேமிப்பு வங்கி

சட்டம வரும

கொழும்பு, செவ்.

இலங்கை வங்கியைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு கமிஷன் நியமிக்கப்படும்.

தபால் சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, தேசிய சேமிப்பு இயக்கம் ஆகியவற்றை ஒன்று இணைத்து தேசிய சேமிப்பு வங்கி அமைப்பதற்கு சட் டம் கொண்டுவரப்படும்.

இந்தத்தகவலை நிதிஅமைச் சர் இன்று ஜனப்பிரதிநிதி கள் சபையில் அறிவித்தார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத் தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூலை மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட் டது.

துரைசிங்கம மீண்டும தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கிராமசபையின் 4-ம் வட்டார அங்கத்தவ ராக, முன்னாள் தலைவர் திரு. சி. துரைசிங்கம் ஏக மனதாகத் தெரிவு செய்யப் பட்டார்.

நேற்றுப்பிற்பகல் தேர் தல் அதிகாரி திரு. முரு கேசு தலைமையில் 4-ம் வட் டாரத்திற்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப் பட்டது. திரு. துரைசிங்கத் தைத்தவிர வேறு எவரும் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யாததால், தேர்தல் அதிகாரி, திரு. துரைசிங்கம் 4-ம் வட்டார அங்கத்தவ ராகத் தெரிவு செய்யப்பட் டுள்ளதாக அறிவித்தார்.

நிர்வாக சீர்கேடு காரண மாக, திரு. துரைசிங்கம், ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தினல், பதவி நீக்கம் செய்யப்பட் டிருந்தார். [அ. நி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org